# "கம்பனைச் சுடு"

★

, IFKA, R:9
N56
2693

க்கிய நிலையம்,
ராடு, பிரம்பூர், சென்னை-11.

# "கம்பனைச் சுடு"

ஆசிரியர் :

## இ. மு. ஆறுமுகம்

புதுமை இலக்கிய நிலையம்

பிரம்பூர் ★ சென்னை-11.

[ஆகஸ்டு 1955 ] [ விலை—அணா 12

# அணிந்துரை

★

கம்பராமாயணத்தைக் கொளுத்து ; அது தான் நமது பகுத்தறிவுக்கு முட்டுக்கட்டை ; பாமர மக்களை அடிமையாக்கி வருவது இராமாயணந்தான் ; ஆகையால் அதை அழித்தே தீரவேண்டும் என்று ஒரு கூட்டம் தமிழ் நாட்டில் கூச்சலிட்டுக் கொண்டிருக்கின்றது. ஒரு சில ஆண்டுகளாக இக் கூச்சல் கேட்கின்றது.

இக் கூச்சல் காரணமாகக் கம்பராமாயணத்திற்கு எந்த ஆபத்தும் வந்துவிடவில்லை ; இக் கூச்சலுக்குப் பிறகு தான் கம்பராமாயணப் பதிப்புகள் திருத்தமாக வெளி வந்து கொண்டிருக்கின்றன ; கம்பராமாயண ஆராய்ச்சிகள் பல தோன்றிக் கொண்டிருக்கின்றன. கம்பராமாயணத்தைப் பலர் படிக்கத் தொடங்கியிருக்கின்றனர். நாட்டிலே பல இடங்களில் கம்பர் கழகங்கள் பிறந்து வளர்கின்றன. ஆகையால் கம்பனைத் தூற்றுவோர்க்கு ஒரு வகையில் தமிழன்பர்கள் நன்றி செலுத்தத்தான் வேண்டும். அதுவே தமிழர் பண்புமாகும்.

கம்பன் ஒரு தலை சிறந்த தமிழ்ப் புலவன் ; பாரகாவியம் பாடுவதிலே அவனுக்கு இணையாக எவரையும் சொல்ல முடியாது. தமிழ் உள்ளவரையிலும், தமிழ் இலக்கியங்கள் பாராட்டப்படும் வரையிலும் கம்பராமாயணமும் தலை சிறந்த இலக்கியமாகவே விளங்கும்,

இலக்கியம் என்பது என்ன? என்பதை அறியா தவர்களே கம்பன்மீது காய்ந்துவிழுவார்கள். சிறந்த குறிக்கோளைக் கொண்டிருப்பது தான் இலக்கியம். குறிக்கோளில்லாமல் எழுதப்படுவன இலக்கியங்கள் ஆகமாட்டா. குறிக்கோளுடைய இலக்கியங்கள் எந்த நாளும் இறக்காமல் உயிருடன்வாழும். குறிக் கோளற்ற புத்தகங்கள் நிலைத்து நிற்க மாட்டா; ஒரு முறை பார்த்தவுடன் பழைய காகிதங்களுடன் சேர்ந்துவிடும்,

*இராமாயணத்தின் அடிப்படைக் கருத்தை அறியாத வரே அதனைத் தூற்றுவார்கள். சர்வாதிகாரத்திற்கும் ஜன நாயகத்திற்கும் நடந்த போராட்டமே இராமாயணம்; சுரண் டலுக்கும், தியாகத்திற்கும் நடந்த சண்டையே இராமாய ணம்; தீமைக்கும் நன்மைக்கும் நடந்த யுத்தமே இராமாய ணம். சர்வாதிகாரம் தலை சாய்ந்தது; ஜன நாயகம் வெற்றி பெற்றது; தியாகம் நிலை பெற்றது; சுரண்டல் மண்ணைக் கவ்விற்று; தீமை மாண்டு மடிந்தது; நன்மை புகழ் பெற்று வளர்ந்தது.*

**இராவணன் ஒரு சர்வாதிகாரி; எல்லோரும் தனக்கு அடங்கி நடக்கவேண்டும் என்ற கொள்கையுடையவன்.**

தன்னுடைய இன்பத்தையே பெரிதாகக் கருது கின்றவன்; பெண்களை வலியச் சிறை பிடிப்பதே அவன் இயல்பு.

**அவனுக்குப் பல மனைவியர்கள் உண்டு; அவர்கள் போதாமல் பிறர் தாரம் விரும்பும் பேதையன்,**

*தன்னுடைய சுகத்தை நாடி—புகழை விரும்பி—தன்னுடைய உடன் பிறந்தார் உறவினர்களையெல்லாம் பலி கொடுத்தவன். தன்னலத்தின் பல கூறுபாடுகளும் திரண்ட உருவமே இராவணன்.*

இராமன் தியாகத்தின் சின்னம்; உடன் பிறந்தானுக்காக நாட்டைத் துறந்தவன். சரணம் என்று அடைந்தவர்கள் யாராயினும் அவர்களைக் காப்பாற்றும் வீரன்; பிறபெண்களைக்கண்ணெடுத்தும் பாராதவன்; ஏகதார விரத முள்ளவன்; சர்வாதிகார வெறியர் அக்கிரமம் புரிபவர்களை அடக்கும் இயல்புள்ளவன்.

**இராவணனுடைய செயல்களைப் பற்றியும், இராமனுடைய நடத்தைகளைப் பற்றியும் இராமாயணம் கூறியிருப்பதைக் காண்போர் இந்த உண்மையை அறியலாம்.**

***இந்தக் காரணத்தால் தான் இராமாயணம் ஒரு சர்வதேச கதையாக விளங்குகின்றது. அந்தந்த நாட்டின் பழக்க வழக்கங்களுக்குத் தகுந்தபடி அக் கதையில் பல மாறுபாடுகளும் காணப்படுகின்றன.***

உதாரணமாகப்பௌத்தராமாயணத்தை எடுத்துக் கொள்ளலாம். அதில் இராமனுடைய தங்கைதான் சீதை என்று சொல்லப்படுகின்றாள். தங்கையையே இராமன் மணந்து கொண்டதாகக் கதை. புத்தர் பிறந்த சாக்கிய வகுப்பினருள் தங்கையை அண்ணன் மணந்துகொள்ளும் வழக்கம் இருந்தது. இவ் வழக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தான்

பௌத்த ராமாயணம் எழுதப்பட்டிருக்கவேண்டும். இதைப் போலவே கம்பன் இராமாயணத்தை எழுதும் போது, தமிழர் நாகரிகம் விளங்கும்படி எழுதியிருக்கின்றான். தமிழர் நாகரிகத்திற்கு ஏற்றபடி பல இடங்களில் கதைப் போக்கை மாற்றியிருக்கின்றான். இதற்கு உதாரணமாக இரண்டு நிகழ்ச்சிகளை மட்டும் கவனித்தால் போதும். இராமன் வில்லை ஒடிப்பதற்கு முன்பே சீதையும் இராமனும் ஒருவரை ஒருவர் சந்திக்க நேர்ந்தது; அச்சந்திப்பு அவர்களிடம் காதலை எழுப்பியது ஒன்று; இராவணன் சீதையைச் சிறையெடுத்த போது அவளைத் தொடவில்லை; அவள் இருந்த இடத்தை அப்படியே நிலத்தோடு, அவள் இருந்த பர்ணசாலையோடு தூக்கிச்சென்றான் என்பது இரண்டு. இந்த இரண்டும் வால்மீகியில் இல்லாதவை.

*காதல் பிறக்காமல் திருமணம் நிகழ்வதில்லை. ஒரு பெண்ணை மற்றொரு ஆடவன் தொடுவது கற்பிற்குப் பங்கமாகும். இவை தமிழர் கொள்கை. இக் கொள்கைகளைக் கம்பர் தன் கதையில் அமைத்துக் காட்டினார்.*

தன் காலத்துச் சூழ்நிலைக் கேற்ப கதையையும் கருத்தையும் கூறிச் செல்வதே ஒரு சிறந்த புலவனுடைய தன்மை. இச் சிறந்த தன்மையைக் கம்பரிடம் காணலாம்.

ஒரு இலக்கியத்தின் பெருமைக்கு மற்றொரு காரணமும் உண்டு. கதை எவ்வளவோ சிறந்து

தாகவிருக்கலாம் ; கருத்து எவ்வளவோ உயர்ந்ததாக இருக்கலாம். ஆனால் அவை நல்ல மொழியிலே—மக்கள் உள்ளத்தைக் கவரும் நடையிலே-படிக்கப் படிக்க மகிழ்ச்சியைத் தரும் முறையிலே-சிந்திக்கச் சிந்திக்கச் சிறந்த கருத்தைச் சுரக்கும் வகையிலே எழுதப்பட்டிருக்கவேண்டும். இவ்வாறு எழுதப் பட்டிருப்பவைதாம் என்றும் உயிருள்ள காவி யங்களாக உலவிக் கொண்டிருக்கும்.

மொழி வள மற்ற நூல்கள் எவ்வளவு சிறந்த கருத்துக்களைக் கொண்டிருந்தாலும், எவ்வளவு சிறந்த கதைப் போக்கைக் கொண்டிருந்தாலும் அவை இலக்கியங்களாக நிலைப்பதில்லை. இலக்கி யத்தைச்சுவைப்போர்க்கு இந்த உண்மை தெரியும்.

**''கம்பநாடன் கவிதையைப்போல் கற்றோர்க்கு இதயம் களியாதே'' என்பது பண்டைப்புலவர் ஒருவருடையபாட்டு. இது உண்மை. கம்பனைப் படிப்பவர்கள் தாம் இப் பாட்டின் அருமையை அறியமுடியும்.**

கருத்தும் மொழி வளமும் நிறைந்த இத்தகைய சிறந்த காவியத்தைத் தூற்றுவதையே ஒரு பெரிய வேலையாகக் கொண்டிருப்பவர்கள் மீது நமக்குச் சிறிதும் வெறுப்பில்லை ; சினமும் இல்லை ; பரிதாபந் தான் எழுகின்றது:

இவர்கள் தமிழின் சிறப்பைப் பாராட்டுகின்றனர் ; தமிழ் இலக்கியங்களின் பெருமையைப் போற்று கின்றனர் ; தமிழர் நாகரிகத்தைக் கொண்டாடுகின்ற

னர். ஆனால் இவ்வளவையும் உள்ளடக்கிக்கொண்டிருக்கும் கம்பனை இகழ்கின்றனர். இதுதான் நமக்குப் புரியாத புதிர்.

இவர்கள் கம்பன் மீது ஆதாரமற்ற குற்றங்களைச் சுமத்துகின்றனர்.

1. கம்பன் ஆரியக்கதையைத் தமிழிலே பாடினன். ஆதலால் அவனுக்குத் தமிழன் என்ற இன உணர்ச்சி யில்லை.

2. இராமனைத் தமிழ் நாட்டிலே தெய்வமாக்கியவன் கம்பன் தான். இராமனை உயர்ந்தவனாகப் போற்றிப் பாடி யிருக்கின்றான்.

3. வால்மீகி இராமனைத் தெய்வமாகக் காட்டவில்லை. சாதாரண மனிதனாகவே காட்டி யிருக்கின்றான்.

4. கம்பன் காம விகாரம் பிடித்தவன். காம உணர்ச்சி உண்டாகும்படி பெண்களின் உறுப்புகளை வர்ணிக்கின்றான்.

என்பன போன்ற குற்றச் சாட்டுகளைக் கம்பர் தலையிலே சுமத்துகின்றனர்.

இவைகளைக் குற்றச் சாட்டுகளாக வைத்துக் கொண்டாலுங் கூட இவைகளுக்குப் பொறுப்பாளி கம்பர் அல்ல என்பதை இந் நூல்லாசிரியர் தெளிவாக விளக்கிக் காட்டுகிறார்.

1. கம்பர் காலத்திலே ஆரியர் தமிழர் என்ற வெறுப்பில்லை. ஆரியர் கதை தமிழர் கதை என்ற வேறுபாடும் தமிழ் நாட்டில் இருந்ததில்லை.

2. கம்பனுக்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே இராமாயணம் தெய்வீகக் கதையாகத் தமிழகத்தில் வழங்கி வந்தது.

அறிஞர்களும் புலவர்களும் இராமனை அவதார புருஷனுகவே எண்ணி வந்தனர். ஆகையால் இராமனைத்தெய்வ மாக்கியவர் கம்பர் அல்லர்.

3. வால்மீகி காலத்திற்கும் கம்பர் காலத்திற்கும் இடையிலே ஆயிரக் கணக்கான ஆண்டுகள் உண்டு. ஆகவே வால்மீகி காலப் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப அவர் இராமனைச் சித்திரித்தார்.

4. பெண்களை வர்ணிப்பதனுல் கம்பனைக் காம விகாரம் பிடித்தவர் என்று கூறினல் தமிழில் செய்யுள் இயற்றியிருக்கும் அத்தனைப்புலவர்களையும், காமவிகாரிகள் என்றே முடிவு கட்ட வேண்டும். சமயாச்சாரிகளும், பக்தர்களும் இக்குற்றச் சாட்டுக்கு விலக்கன்று. பெண்களை வர்ணிப்பது புலவர்மரபு.

இவைகளை யெல்லாம் தக்க சான்றுகளுடன் இந் நூலாசிரியர் எடுத்துக காட்டியிருக்கின்றூர்.

கம்பரைக் குறை கூறுவோர்க்கு இந்நூலாசிரியர் அளிக்கும் விடையும், அதற்குக் காட்டும் ஆதரவும் ஆணித்தர மானவை.

மக்கள் வர வர நாகரிகம் பெற்று வளர்ந்து வருகின்றனர். அவர்களின் நாகரிகத்தைப் பிரதிபலிப்பதே இலக்கியம். ஆகையால் ஒவ்வொரு இலக்கியத்தையும், அவ்விலக்கியம் தோன்றிய காலத்தின் சூழ் நிலையை வைத்துக் கொண்டு ஆராய்வது தான் உண்மையான ஆராய்ச்சியாகும்.

இவவுண்மையை இந்நூலாசிரியர் முதலில் விளக்கியிருப்பது பாராட்டத்தக்கது. இதன் பிறகு தான்

கம்பரைக் குறை கூறுவோர்க்கு விடையளிக்கத் தொடங்குகிறூர். இந்த முறை போற்றத்தக்கது.

ஆகவே இன்றுள்ள சூழ் நிலையில் இப்படிப் பட்ட ஒரு புத்தகம் வெளி வர வேண்டியது அவசியம். கம்பரைத் தூற்றுவோரின் அறியாமையை அம்பலப் படுத்த இப் புத்தகம் பெரிதும் உதவி செய்யும் என்பதே எனது நம்பிக்கை.

இத்தகைய சிறந்த ஆராய்ச்சியை எழுதி வெளியிட முன் வந்த தோழர் **தீ. மு. ஆறுமுகம்** அவர்களைத் தமிழகம் பாராட்டும் என்பதிலே ஐயமில்லை. தமிழர்கள் இப் புத்தகத்திற்கு ஆதரவளிப்பதே அவருக்கு நாம் அளிக்கும் பாராட்டாகும்.

**எண் 9, ஏழாவது தெரு,**
**சவுராஷ்டிர நகர்,**
**சென்னை-24**

**அன்பன்**

**சாமி சிதம்பரன்**

# முன்னுரை

★

"நோய்நாடி நோய் முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்னும் அருமையான திருக்குறள் நமக்கு ஒரு தத்துவத்தை மிகவும் தெளிவாகத் திட்டவட்டமாக அறிவிக்கிறது. நோயை முதலில் அறிய வேண்டும்; அதை அறிந்து கொண்டால் மட்டும் போதாது; அதன் மூலத்தை அறிந்தாக வேண்டும்: அதாவது அதன் வேர்க்கே செல்ல வேண்டும்; அதனை ஆராய்ந்தறிதல் வேண்டும்; அங்குத்தான் நோயைத் தணிக்கும் வாயை—வழியைக் கண்டு பிடிக்க வேண்டும் என்பது இதன் பொருள்.

மருத்துவமுறையையே குறிக்கொண்டு கூறப்பட்டுள்ளது எனினும் இத் திருக்குறள் மனித வாழ்வையே செம்மைப்படுத்தும் சகலதுறைகளுக்கும்பொருந்தும் என்பதை எவரும் மறுக்க முடியாது

இருந்தும் துரதிர்ஷ்டவசத்தினல் நம் நாட்டுப் பகுத்தறிவு வாதிகள் தமிழனைப் பற்றி நின்று வருத்தும் நோயின் தன்மையையே புரிந்து கொள்ளாமல், அதன் மூலத்தையே தெரிந்து கொள்ளாமல் நோய் ஒன்றிருக்க மருந் தொன்று கொடுக்கும் மருத்துவனைப் போலத், தமிழ்நாட்டில் தங்கள் அடுக்கு மொழி அலங்காரச் சொற்களால்—மக்களை வசீகரிக்கும் ஆடம்பரப் பேச்சுகளால் வழியல்லாத வழியை அவர்கள் பின்பற்றுவதோடு மற்றையோரும் அவ்வழிச் சென்று அவதிப்படும் அவலமார்க்கத்தினைப் பரப்ப அரும்பாடு படுகின்றனர்.

கம்பராமாயணத்தைக் குறை கூறுவதும், அதனைச் சுட்டெரிக்க வேண்டுமென்பதும், அந்த அடிப்படையற்ற—விஞ்ஞானத் தொடர்பற்ற—மனித சாதியின் வரலாற்றிற்குப் புறம்பான கொள்கையிலிருந்தே முளைத்திருக்கின்றன. எனவே, இந்நூலில் அப்போலிக் கொள்கையை—அதன்

விளைவையே பிரதானமாகக்கொண்டு விமர்சனந் தொடங்குகின்றது : முடிகின்றது. கம்ப ராமாயண விமர்சனத்தை இரண்டாந் தரத்தில் வைத்தே விமர்சிக்கப்படுகிறது. இது புதிதல்ல ; வள்ளுவன் வகுத்த முறை. அதை மேலே காட்டிய திருக்குறள் எடுத்துக்காட்டுகிறது.

இம்முறையில் நான் எவ்வளவு தூரம் வெற்றிபெற்றிருக்கின்றேன் என்பது எனக்குத் தெரியாது. அது தமிழகத்திற் பிறந்த தனிப்பெருமை வாய்ந்த ஏன்னருமைத் தாயக மக்கள் கட்டவேண்டிய முடிவு.

நான் முற்ற முடிந்த ஒரு புலவனல்ல; தொழிலாளவர்க்கத்திற் பிறந்த ஒரு சாதாரணத்தொழிற்சங்க ஊழியன் என்பதைப் பெருமையோடு என் தாயக மக்களுக்கு கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

எனவே மொழி வழியிலோ பொருள் வழியிலோ குற்றங்கள், குறைகள் இந் நூலிற் காணப்படலாம். அவற்றைப் பொருட்படுத்த மாட்டார்கள் ; என்னுடைய குறிக்கோள் நல்லது. அதனை ஏற்றுக் கொள்ளவுந் தவறமாட்டார்கள் என் தாயகமக்கள் என்று உறுதியாக நம்புகிறேன்

இனி, இந்நூலுக்கு அரியதொரு முன்னுரை எழுதி உதவியுள்ள தமிழகத்தின் தலைசிறந்த புலவர்களில் ஒருவராகிய உயர்திரு : சாமி சிதம்பரனுர்க்கு என் நன்றியைஇதயபூர்வமாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்

பழம்பெருமைவாய்ந்த தமிழகத்தின் பெருங்குடி மக்கள் அத்தாயகத்திற் பிறந்த என் சிறுமையையும் பெருமையாக ஏற்று என்னை வாழ்த்துவார்கள் என்னும் முழு ı ம்பிக்கையுடன் இதனை முடித்துக் கொள்கின்றேன்.

தனியறிவுக் கோஷங்கள் மடிக !
தத்துவ அறிவுக் கோஷங்கள் வளர்க !

தோழமையுள்ள,

தீ. மு. ஆறுமுகம்

# கம்பனைச் சுடு!

★

**போலிப் பிரமைகள்**

ஒரு நாட்டு மக்களை முன்னேற்றுவதற்கு அந் நாட்டு மக்களின் சென்ற காலத்தைப் பற்றியும், நிகழ் காலத்தைப் பற்றியும், எதிர்காலத்தைப் பற்றி யுங்கூட உண்மையான ஒரு சித்திரத்தை வரைந்து காட்டவேண்டும். அதற்கு மாருகப் **போலிச் சித்தி ரத்தை** வரைந்து காட்டுவதனுல் அவர்களை வெறி பிடித்தவர்களாக ஆக்கமுடியுமே யல்லாது முன் னேற்றுவ தென்பது ஆகாத காரியம். அதுமாத்திர மல்ல; அவர்களை அழிவுப் பாதையிலும் அது கொண்டுபோய்விடும். இதைச் செர்மானிய தேசத் தில் நாஜிகள் செய்ததன் பலனுக இன்று அவர்கள் அடைந்துள்ள சிறுமையினை உலகம் கண்கூடாகக்

காண்கிறது. இங்கிலேயில் அதே நச்சினைத் தமிழக மக்களுக்கு ஊட்டி அவர்களை வெறியர்களாக்கும் முயற்சி இன்று நடைபெற்றுவருகிறது.

அதனடிப்படையில் எழுவதுதான் "கம்பராமா யணத்தைச் சுட்டெரிக்க வேண்டும்" என்பது போன்ற உதவாக்கரை கோஷங்கள். எனவே, அந்த அடிப்படையைப் பற்றிய போலித் தன் மையை விளக்க வேண்டுவது இன்று அவசர அவசியமாகிறது.

தமிழர்கள் மட்டுமல்ல; உலகில் வாழ்கின்ற ஒவ்வொரு இனத்தவரும் முன்னையைக் காட்டிலும் வளர்ந்து முன்னேறிவருகின்றனரேயன்றிப் பின்னுக் குப் போகவில்லை. **மனித சாதியின் பொதுவான விதியே முன்னேறிச் செல்வதன்றிப் பின்னேக்கிப் போவ தல்ல.** ஆனால், இன்று இங்கே கூறப்படுவது அப் பொது விதிக்கே மாறுபட்ட ஒன்று என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

தமிழன் முன்னே சீரும் சிறப்போடும் வாழ்ந் திருந்ததாகவும், இப்பொழுது அவன் தாழ்ந்து விட்டதாகவும் கூறப்படுகிறது. இது சரித்திரத் தையே புரட்டித் திரித்துக் கூறுவது.

தமிழனுடைய அரசியல், சமூகப், பொருளாதா ரங்களை எடுத்துக்கொண்டாலும், அவனுடைய அறிவு முயற்சிகளை எடுத்துக்கொண்டாலும் அவன் முன்னுக்கு, அதுவும் என்றுமில்லாத அளவு முன்

னேற்றத்திற்கு ஆளாகி யிருப்பதைக் காணமுடியும். ஆனால் இந்த முறையில் மக்கள் ஆய்ந்து முடிவு காண்பதற்குப் பதிலாக வளர்ச்சியில் ஏற்படும் சிறுமைகளைப் பெரிது படுத்தி அவற்றைப் பார்த்து ஆத்திரமடையும் அளவிற்கு இந்தப் போலிப் பிரமைகள் நிலைமையை உண்டுபண்ணுகின்றன.

**நன்மையில் தீமை**

இதன் மூலம் **"மனித சாதியின் வளர்ச்சியில் நன்மைகளோடு தீமைகளும் தவிர்க்க முடியாதபடி விரவியேவரும்"** என்னும் பொது விதியும் மறுக்கப்படுவதோடு நன்மையைப் புறக்கணித்துத் தீமையையே பெரிதெனக்கொண்டு அதன்வழிச் சிறுமைப்படும் முயற்சியும் தலைதூக்குகிறது.

மனிதசாதி தோன்றியதிலிருந்து வாயுவேகமனோவேகத்தில் வளர்ந்தே வந்திருக்கிறது. எனினும், அதேசமயத்தில் அது பல சிறுமைகளுக்கும் ஆளாகியிருக்கிறது. காட்டுமிராண்டியாகவிருந்த மனிதசாதி உற்பத்தியைக் காண்பதன் மூலம் நாகரிகத்தையே எட்டிப்பிடித்திருக்கின்றது, இது மகத்தான முன்னேற்றம். ஆனால் அதே சமயத்தில் காட்டுமிராண்டியாக மனிதன் வாழ்ந்த காலத்தில்அவனிடத்தில்இல்லாத **தனியுடைமைப்பித்து** இந்த முன்னேற்றத்தின் •பலனாகத் தோன்றுகிறது. காட்டுமிராண்டிச் சமூகத்தைக் கடந்து மனிதசாதி உற்பத்திச் சமூகத்தை, அதாவது தானே தனக்கு

வேண்டியவற்றைச் சமைத்துக்கொள்ளும் உன்னத நிலையைப் பெற்றது சரித்திரத்திலேயே பிற்காலங்களில் அது பெற்றுள்ள சகல முன்னேற்றங்களிலும் தலைசிறந்த முன்னேற்றம் என்பதனை யாரும் மறுக்க முடியாது. அப்படிப்பட்ட மகத்தான முன்னேற்றத்தைக் கண்ட மனிதசாதி அன்றிலிருந்து இன்று வரைத் தவிர்க்கமுடியாத நிலையில் இருந்து வருகிற **வர்க்கப் பிரிவினை**யாகிய சிறுமையையும் உடன் கூட்டியே பெற்றிருக்கிறது. அதனால் முன்னிருந்த காட்டுமிராண்டி நிலையே சிறந்தது என்று கூறுதற்கு எவரும் ஒருப்படார். ஆளப்படுவோனும் ஆளுவோனுமாக மனிதசாதி வளர்ச்சியின் பயனாகப் பிரிகிறது. அந்த வர்க்கப் பிரிவினையை இன்று வரை அதாவது மனிதசாதி எத்தனையோ சமூகங்களைக் கடந்து எவ்வளவோ முன்னேற்றங்களைப் பெற்றுவந்துங்கூடத் தவிர்க்கமுடியாமல் அதற்காகப் போராடவேண்டியிருக்கிறது. இருப்பினும் அதனால் இன்றுவரை வளர்ந்து வந்துள்ள வளர்ச்சியை மறுத்துக் கூற முடியாது.

கட்டைவண்டியில் தூரத்தைக் கடந்த மனிதன் இரயிலிலும், கப்பலிலும் அதனைச் செய்வது மகத்தான முன்னேற்றம். ஆனால் இம் முன்னேற்றத்தின் பயனைத்தான் ஒரு நாட்டில் பிறந்தவர்களுக்குள்ளேயே ஆளுவோனும் ஆளப்படுவோனுமாகவிருந்த பழைய நிலை மாறிப் பல்லாயிரக்கணக்கான

மைல்கள் தொலைவிலும், கடல், மலை, காடு போன்ற வைகளால் பிரிக்கப்பட்டுத் தனித்து வாழ்கின்ற நிலைமையிலுமுள்ள மக்கள் ஆளுவோராகவும், ஆளப்படுவோராகவும் ஆகின்ற நிலைமை உருவாகின்றது.

**கொலம்பஸ்** உலகின் இதர பாகங்களைக் கண்டு பிடித்ததும், பிடிப்பதற்கு வழிவகுத்ததும் மனித சாதி முழுமைக்குமே மிகச் சிறந்த சாதனையாகும்; முன்னேற்றமாகும். ஆனால் அதே சமயத்தில் அந்நன் முயற்சியின் மூலமாகத்தான் ஐரோப்பா கண்டத்தில் வாழ்கின்ற ஒரு சிறு கூட்டம் உலகம் பூராவையும் தங்கள் காலடியிற்கொண்டு வருகிற தீமையும் உருவாகி யிருக்கிறது. சரி; நன்மையிலிருந்து தீமை பிறக்கிறது; அதோடு நின்றுவிடுகிறதா? இல்லை. அந்தத் தீமையிலிருந்தும் நன்மை பிறப்பதைக் காண்கின்றோம்.

**தீமையிலிருந்து நன்மை.**

கொலம்பஸ் முயற்சியின் பலனாக இந்தியத் துணைக்கண்டத்தை ஐரோப்பியர் தெரிந்துகொண்டு அதன்பயனாக அவர்கள் நம்மை அடிமை கொண்டது தீமை. ஆனால் அந்தத் தீமையிலிருந்து எவ்வளவு நன்மைகளைப் பெற்றிருக்கிறோம் நாம். எண்ணிப் பார்ப்போம்.

முதலாவதாகப் பிரிட்டனின் ஆட்சியினால் இவ்விந்தியத் துணைக்கண்டம் முழுவதும் ஒரே இராச்

சிய அமைப்பின் கீழ் வருகிறது ; வலைப்பின்னலைப் போன்ற அரசாங்க அமைப்பு ஏற்படுகிறது ; விஞ் ஞான வளர்ச்சியின் மூலம் மேலைநாடுகளில் ஏற்படு கிற சகல சாதனங்களையும் நாம் பெறுகிறோம். வெள்ளையரால் இங்கு இரயில் போடப்படுகிறது. நம்முடைய நன்மைகளுக்காகவல்ல; அவர்களு டைய நன்மைக்காகவே ; இங்குள்ள செல்வங் களைக் கொள்ளை கொண்டு போகவும், இந்தியத் துணைக்கண்ட முழுவதும் தன்னுட்சி செலுத்த வுமே அவர்கள் அக்காரியத்தைச் செய்கின்றனர். ஆனால் அதன் மூலமாகத்தான் நாம் அந்த வெள்ளை ஏகாதிபத்தியச் சனியனையே தூக்கி எறிகிற அளவுக்கு முன்னேற்றமடைந்திருக்கிறோம்.

இரயில் இங்கு வந்ததன் மூலமாகத்தான் இயந் திரத் தொழிலாளி வர்க்கம் இங்கே தோன்றுகிறது. இரயில் இங்கு வந்ததனால்தான் படித்த வர்க்கம் ஒன்று இங்கே முளைக்கிறது. இரயில் வந்ததனால் தான் நம்மைப் பற்றிநின்ற மூடப்பழக்கவழக்கங் களில் எத்தனையோ நம்மைவிட்டுவிட்டுத் தாமே ஓட்டம் பிடிக்கின்றன.

### தாழ்த்தப்பட்டவர் உயர்ந்தனர் !

இரயிலை அன்றாடம் ரிப்பேர் செய்வதற்காகத்தான் வெள்ளையன் இங்கு ஒர்க்ஷாப்புகளைக் கட்டுகின் றான். ஆனால் அந்த ஒர்க்ஷாப் ரிப்பேர் சாலையாக மட்டுமிருக்கவில்லை. சமரஸ ஸன்மார்க்கக் கலா

சாலையாக அது பணியாற்றி வருகிறது. சோஸலிஸ நல்லாட்சியை நிர்மாணிக்கக்கூடிய வீரபுருஷர்களை, மனிதசாதி முழுமைக்குமே விடுதலையளிக்கக்கூடிய தியாக ரத்தினங்களை அது நமக்கு அளித்திருக்கிறது. ஓர்க்ஷாப் தோன்றுகிறது. அதற்கு முன்னே வயலை விட்டால், அதை உழுது பயிரிடுவதை விட்டால் வேறுவழியின்றி அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்களாகவிருந்த நிலப்பிரபுக்களின் அடிமை நுகத்தடியின் கீழ் அவதிப்பட்டு உய்யும் வழியறியாதிருந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விமோசனம் பிறக்கிறது. வயலையும் உழவுத்தொழிலையும் மாத்திரமல்ல; தன்னைப் பல்லாயிர ஆண்டுகளாக மேலெழாதவாறு சேற்றில் அழுத்திக்கொண்டிருந்த நிலப்பிரபுக்களின் கொடுமை மிக்க பண்ணையடிமைத் தளையையே தூக்கியெறிந்து விட்டு இயந்திரசாலையின் வாயிலிலே நுழைகின்றது தாழ்த்தப்பட்ட மனிதவர்க்கம். அதன்பயனாக நம் தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் அடைந்துள்ள மகோந்நதமான முன்னேற்றங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். இயந்திரத்தொழிற்சாலையில் மற்றைய சாதிக்காரர்களோடு சரி, நிகர், சமானமாக நின்று தொழில் புரிவதோடு அவர்களைப் போலவே பொருள் வருவாயிலும் மிக்கவர்களாகும் நிலையை அவர்கள் பெறுகிறார்கள். அதனால் அவர்கள் இன்று சேரியிலேயே சாக்கடைச் சேற்றிலேயே அழுந்திக்கிடக்கவில்லை. நகரங்களிலும், மற்றைய

வர்களைப்போல மாடி வீடுகளிலும் வசிக்கும் மகத்தான முன்னேற்றத்தைப் பெற்றுள்ளனர். ஆடை யுடுத்துவதிலும், ஆபரணங்களை யணிவதிலும், தாங்கள் பெற்றெடுத்த அரும்பெறல் மக்களைப் படிக்க வைப்பதிலும். பட்டங்கள் பெறுவதிலும், சட்டங்கள் இயற்றுவதிலும் பங்கு பெறக் கூடிய அளவுக்கு அவர்கள் முன்னேறியிருக்கின்றனர். இந்திய அரசியல் திட்டத்தை வகுத்தவர்களுள் **டாக்டர் அம்பேத்கார்** ஒருவர் என்பதையும், சென்னை சட்டசபையின் சபாநாயகர் **ஸ்ரீ சிவஷண்முகம் பிள்ளை** என்பதையும் நாம் பார்க்கிறபொழுது 'ஆஹா! என்ன அற்புதம்? எவ்வளவு முன்னேற்றம்' என்று மூக்கின் மேல் கைவைக்கவல்லவா தோன்றுகிறது.

**உபதேசத்தினலல்ல.**

இவ்வளவும் எதனுல்? இயந்திரத்தொழில் வளர்ச்சியினுலல்லவா? சரித்திரத்தைப் புரட்டித் திரித்துக்கூறும் சிலர் கூறுகின்றூர்கள் **இது தங்களுடைய சாதனை என்று.** இதைவிடக் கேலிக்கூத்து வேறென்றிருக்க முடியாதல்லவா? இன்றும் வயலில் உழுது பயிரிடும் அடிமைத் தொழிலாளியாகப் பலர், தாழ்த்தப்பட்ட மக்கள் கொடுமைக்கு ஆளாக்கப்படுவதையும், அவர்களோடு பிறந்த அருமைச் சகோதரர்களை ஒர்க்ஷாப்பிலும், மில்களிலும் அமர்ந்து யாருடைய தயவு தாட்சண்யமுமின்றித் தாங்களாகவே முன்னேறிவருவதையும்

பிரத்தியட்சமாக நாம் பார்க்கின்றபொழுது "உபதே சத்தினுல் அவர்கள் உயர்ந்துவிட்டார்கள்" என்று கூறுவது உண்மையாக முடியுமா?

அவர்களே "ஒர்க்ஷாப்பில் சாதி வித்தியாசம் ஒழிந்து விட்டால் போதுமா? மற்றிடங்களிலெல் லாம் அது ஒழிய வேண்டாமா" என்று கேட்கின் றனரே: அதன் உண்மை என்ன? உபதேசத்தினுல் ஒன்றும் மாறிவிட வில்லை; ஒர்க்ஷாப்பினுல்தான்— அதாவது இயந்திரத் தொழில் வளர்ச்சியினுல்தான் அங்கே மட்டுந்தான் அது ஒழிந்திருக்கிறது. பஸ்ஸில் ஏறுகிறபோழுது சாதி வித்தியாசத்தைப் பாராட் டாத ஒருவன் தன் வீட்டிலும் பிற விடங்களிலும் அதனைப் பாராட்டுகின்றுன் என்றுல் அதன் காரண மென்ன? இயந்திர வளர்ச்சி சாதி வித்தியாசத்தை விட்டொழிக்கும்படி நிர்ப்பந்திக்கிறது; விரட்டியடிக் கிறது. வீட்டில் வித்தியாசங்கள் நிலவுவதாக நினைக்கி ருேம். ஆனுல் அதேசமயத்தில் பேக்டரிகளின் சார்பில் தொழிலாளர்களுக்காகக் கட்டப்பட்டுள்ள விடுதி களில் அது பறந்துபோகிறதே. அங்கே அடுத்தடுத்த வீடுகளில் முகத்திலே பிறந்ததாகத் தருக்கிக் கூறித் தலைதடுமாறும் பார்ப்பனத் தோழர்களும், தாழ்த்தப் பட்ட சகோதரர்களும் வாழ்வதைக் காண்கிறுேமே.

**மூடப் பழக்கங்கள் பறக்கின்றன!**

நடந்து போவதற்கு இராகு காலம், சூலம், எமகண்டம் பார்க்கின்ற மக்கள் இரயிலில் பிரயா

ணம் பண்ணுவதற்கு அவற்றைப் பார்க்காமல் விழுந்தடித்து ஓடுவதை நாம் காண்கின்றோமே. பழைய நாட்டுப் புறங்களிலேயிருந்த எத்தனையோ வேறுபாடுகள், மூடப் பழக்க வழக்கங்கள் விஞ்ஞான வளர்ச்சியினால் ஏற்பட்ட புதிய நகரங்களில் இருந்தவிடந் தெரியாமல் மறைந்து போய் விட்டனவே.

இப்படியாக இயந்திரத் தொழிலின் மூலமாக மனித சாதி அடைந்துள்ள முன்னேற்றம் அளவற்றவையாக விருக்கின்றபோழுது. இந்த இயந்திரத் தொழிலையே இங்குப் புகுத்தியது நம்மை அடிமைப் படுத்திய ஏகாதிபத்தியமே என்பதைப் பார்க்கிற காலத்தில் நன்மையில் தீமையும், தீமையில் நன்மையும் எப்படி ஒன்றைவிட்டு ஒன்று இணைபிரியாத, தவிர்க்க முடியாத நிகழ்வுகள் என்பது நன்றாகத் தெரிகிறதல்லவா ?

இனி இரயில்வே நிர்வாகத்தைத் திறம்பட நடத்துவதற்கு ஒரு படித்த கூட்டத்தை ஏகாதிபத்தியந்தானே சிருஷ்டித்தது. எத்தனை கலாசாலைகளையும் கல்லூரிகளையும் அது ஏற்படுத்தியது. அதன் மூலம் முளைத்தெழுந்த அந்த வர்க்கந்தானே அந்த ஏகாதிபத்தியத்திற்கெதிரான **தேசீய இயக்கத்திற்** பங்கு கொண்டு தீவிரக் கிளர்ச்சி செய்தது. அது மாத்திரமல்ல; வெள்ளையர்கள் இங்கே நுழைந்ததன் பயனாக அவர்களுடைய ஏஜண்டுக

ளாகப் பணியாற்றியதன் மூலமாக இந்நாட்டில் ஒரு பணக்காரக் கூட்டம் உருவாகிறது. இதுதானே அந்தத் தேசீய இயக்கத்திற்குப் பண உதவி செய்து பக்க பலமாக நின்றது.

எனவே பிரிட்டிஷ் ஆட்சி இந்நாட்டில் ஏற்பட்டது தீமையானாலும், அதே சமயத்தில் அந்த ஆட்சியை நிலை நிறுத்திக்கொள்ளவும், இங்குள்ள செல்வங்களைக் கொள்ளை கொண்டேகவும் அது செய்த ஒவ்வொரு முயற்சிகளும் நமக்கு நன்மைகளாகவும் -நம்மை முன்னேற்றுஞ் சாதனங்களாகவும்அமைந்ததோடு அந்த ஆட்சியையே தூக்கி எறிவதற்கான ஏதுக்களாகவும் முடிவதைக் காண்கின்றோம்.

**எல்லாம் இயற்கையின் விளைவுகள்.**

இனி, வெள்ளையர்கள் ஏன் இங்கு வருகின்றார்கள் ? எதற்காக நம்மை அடிமைப் படுத்துகின்றனர் ? இயற்கை விதிகளையும். விஞ்ஞானத்தின் இயல்பினையும் அறியாதவர்கள் "அவர்கள் இங்கு வந்ததும், நம்மை அடிமைப் படுத்தியதும் அவர்களுடைய சொந்த விருப்பு வெறுப்பிற்காகச் செய்த சூழ்ச்சிகள்; தந்திரங்கள்; யோக்கியப் பொறுப்பற்ற காரியங்கள்" என்று வருணிப்பார்கள். அவர்களையே நாம் திருப்பிச் சில கேள்விகளைக் கேட்டால் அவர்களும் தங்கள் கூற்று ஆதாரமற்ற போலி வாதமென்பதைத் தாங்களாகவே உணர்ந்து கொள்ளுவரே.

வெள்ளையர்கள் வாழ்ந்த பிரதேசத்தின் அமைப்பு அவர்கள் வாழ்வதற்குரிய நிலையிலில்லை. எனவே அவர்கள் வேற்றிடங்கட்குச் சென்றலன்றித் தாங்கள் வாழ முடியாதென்கின்ற நிர்ப்பந்தத்திற்காளாக நேர்கின்றது. இது அவர்களுடைய குற்றமா ? அயோக்கியத்தனமா ? இல்லையே. இயற்கையின் கோளாறுதானே. சரி; அவர்கள் ஏன் இந்தியத் துணைக்கண்டத்தை நாடி வருகின்றனர் ? இங்குள்ள இயற்கையின் செழுமை அவர்களைக் கூவி அழைக்கின்றது. இதனால் இங்கிலாந்து தேசத்தின் இயற்கையிலுள்ள வறுமை அவர்களை **"வெளியே போ; அல்லது செத்து மடி"** என்று பிடர்பிடித்துத் தள்ளுகிறது. இந்தியத் துணைக் கண்டத்தின் செழுமை **"வா; வந்து வாழ்வதற்கு வழி செய்து கொள்"** என்று வருந்தி அழைக்கின்றது. எனவே இந் நிகழ்ச்சிகள் இயற்கை அமைப்புகளால் நிகழ்ந்தவையே யென்பதை நாம் நன்கு புரிந்து கொள்ள முடியுமே.

### விஞ்ஞானத்தின் வெற்றி—தோல்வி

இதற்குமேல் அவர்கள் இங்கு வந்து நம்மை அடிமைப்படுத்தியதாவது அந்த மனிதர்களின் சொந்த சாமர்த்தியமா ? என்று பார்ப்போம். இல்லையே. அதுவும் இயற்கையின் விளைவே. உணவு, உடை உற்பத்தியில் நாம் சிறந்திருக்கிறோம். அதற்குக் காரணம் இங்குள்ள இயற்கை

அமைப்பின் நீர் வளம்; நிலவளம் முதலியசாதனங்களின் நிலை. அதேபோல அவர்கள் ஆயுத உற்பத்தியிலும், கப்பல் கட்டுதல் போன்ற தொழில்களிலும் முன்னேறியிருந்தனர். அது அவர்கள் நாட்டின் இயற்கை அமைப்பின் விசித்திரம். அதனால் அவர்கள் நம்மைச் சுலபமாக வெற்றிகொள்ளுகின்றனர்.

இவ்வாராய்ச்சியின் மூலம் நாம் தெரிந்து தெளிவது என்ன? இயற்கையோடியைந்தே நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் நன்மையையும் தீமையையும் உடன் கூட்டியே தம்முள் அடக்கிக்கொண்டிருக்கின்றன. அந்நிகழ்ச்சிகள் தவிர்க்க முடியாதவை என்னும் இயற்கைப் பொதுவிதிகளைத் தெரிந்துகொள்ளுகிறோம்.

இப்படியே உலகிலுள்ள ஒவ்வொரு நாடுகளிலும் வேற்று நாட்டவர்கள் நுழைவும், அதன் பயனாகத் தீமையும், நன்மையும் உண்டாதலும் தவிர்க்கமுடியாத, இன்றியமையாத நிகழ்ச்சிகளாக நிகழ்ந்திருக்கின்றன என்பது சர்வதேச ரீதியில் உலக சரித்திரத்தை முறையாகப் படித்துப் பார்ப்போர்க்கு இனிது புலனாகும்.

இன்றுள்ள எந்த நாட்டில் வாழ்கின்ற மக்களை எடுத்துக்கொண்டாலும் அவர்கள் அங்கேயே பூர்விகமாக வாழ்ந்துவருகிறவர்கள். அதாவது அவர்கள் மனிதர்களாக உருவெடுத்தது முதலாக

இன்று வரை அங்கேயே வாழ்ந்து வருகிறவர்கள் என்று கூறிவிட முடியாது,

### மனிதனின் தோற்றம்

மனிதசாதியே முதன் முதலாக உருக்கொண்டது கிழக்கு மத்தியஆசியாவில்தான் என்றுவிஞ்ஞானிகள் கூறுகின்றனர். அங்ஙனமாயின் மனிதசாதி முழுமையும் இன்று ஐந்து கண்டங்களில் விரவி நிற்கும் மனிதகுலம் முழுவதும் ஓரிடத்திற் பிறந்து இயற்கையின் சேஷ்டைகளினால் உலக முழுவதும் பரவியிருக்கிறது என்னும் மறுக்கமுடியாத உண்மையைக் காணமுடியும். பின்னர் அவன் இங்கு வந்தான்; இவன் அங்குப் போனான் என்பதைப் பெரிது படுத்தி வந்தவன் மீதும் போனவன் மீதும் குற்றஞ்சுமத்தி நிகழ்காலத்தில் இருவருக்குள்ளும் வேற்றுமையைப், பகைமைத்தீயை வளர்ப்பது மனித குலத்தின் முன்னேற்றத்திற்குச் செய்யுஞ் சேவையல்ல; அதை அழிவுப்பாதைக்கு அழைத்துச் செல்லும் அப்பட்டமான தீய முயற்சியேயாகுமென்பதில் ஐயத்திற்கிடமேது?

### வடவர் நுழைவு

இந்தக் கண்ணோட்டத்தையும், விஞ்ஞான போதத்தையும், இயற்கையின் விசித்திரங்களையும் மனத்துட்கொண்டு வடவர் அதாவது ஆரியர் இங்கு வந்தது அவர்களின் சொந்த விருப்பு வெறுப்பிற்காகச் செய்த சூழ்ச்சிதானா? அது தவிர்க்கக்

கூடியதுதானு? அதனுல் விளைந்தது தீமைதானு? நன்மையே கிடையாதா? என்பவற்றை நாம் ஆராய்ந்தறிதல் வேண்டும். ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் நுழைவும், அவர்கள் நம்மீது ஆதிக்கங் கண்டதும் பிறவும் இயற்கையின் விளைவுகள்; தவிர்க்க முடியாதவை என்பது புலனுகும்.

ஆகவே, ஆரியர் நுழைவையும், அவர்கள் செய்த தீமையையும் பெரிதுபடுத்துவது அதன் மூலம் அவர்களுக்கும் நமக்கும் பகைமையை வளர்ப்பது; அதற்கான முறையில் சரித்திரத்தைப் புரட்டுவது அனைத்தும் நம்மை முன்னேற்றுவதற் கான நன்முயற்சிகளல்ல. நம்மை நாமே கெடுத் துக்கொள்ளும் தீய முயற்சிகள்.

அதனுல் அந்தப் பழைய வரலாற்றின் மீது கவனஞ்செலுத்தாது, இன்று நாமும் நம் தாய்த்திருநாடும் முன்னேறுவதற்குத் தடைக் கற்களாக நிற்கும் தீய சக்திகளை முறியடிப்பதற்கு நாம் மட்டுமல்ல; நம்மைப்போல அத்தீய சக்தி களுக்கு ஆட்பட்டுத் தங்கள் தங்கள் தாயகங்களில் தாழ்வுற்றுக்கிடக்கும் சகல தேசீய இன மக்களையும் ஒன்றுபடுத்தி '**தாயகங்களுக்குத் தனியாட்சி**' என்ற அடிப்படையில் அவையனைத்தும் இஷ்டபூர்வமாக இணைந்து நிற்கும் **இந்தியக்கூட்டாட்சி** என் னுங் கோஷத்தின் கீழ் ஒற்றுமைப் போராட்டத்தை நடத்தி, அதன் மூலம் அவர்களும் நாமும் சுதந்தர

சுயேச்சையான தனிக்குடியரசுகளை மலரவைப்ப துவே இன்று நம்முன்னுள்ள சிறந்த கடமை.

## முன்னும் பின்னும்

இனி, வடவர் நுழைவுக்கு முன்னே தமிழர் நன்னிலையிலிருந்தனர் என்றும், அவர்கள் நுழை விற்குப் பின்னே அதினின்றும் இழிந்துவிட்டனர் என்றும் கூறுகின்றனர். முதலில் இது எப்படி இயற்கை விதிக்கே அதாவது "**மனிதசாதி முன்னேறிச் செல்லும் இயல்பினதேயன்றிப் பின்னேக்கி ஒரு நாளும் போகவே போகாது**"[7] என்னும் இயற்கை விஞ்ஞான விதிக்கே புறம்பானது என்பதை விளக்கிக்காட்டி யுள்ளோம். அது எப்படியிருப்பினும் இப்படிச் சொல்லுவதில் உண்மை ஏதாவது இருக்கிறதா என்பதையும் பார்ப்போம்.

வடவர் நுழைவுக்கு முன்னே தமிழர்கள் நாகரி கத்திற் சிறந்திருந்தார்கள்; வாணிபத்தில் ஓங்கியிருந் தார்கள்; கலைகளில் மிக்கிருந்தார்கள்; போர் வலி யிலும் மேம்பட்டிருந்தார்கள்" என்று கூறுகின்ற னர். உண்மை. இவற்றை யாரும் மறுக்கவில்லை; மறுக்கவும் முடியாது, ஆனல் இவற்றுள் எதிலும் தமிழன் பின்னே குறைந்துவிடவில்லையே. இன் னுஞ் சொன்னல் ஆயிரமடங்கு வளர்ந்தும் உள்ளா னே. 'நாகரிகம்' என்பது என்ன? மனிதனின் வாழ்க்கைமுறைதானே. அப்படியானல் இன் றைய தமிழன் வாழ்க்கை எவ்விதத்தில் குறைந்தது?

அன்று அவன் உழுது பயிரிடுவதிலும், கைத் தொழிலிலுமே சிறந்திருந்தான். இன்றோ அவன் அவ்விரண்டில் மட்டுமல்ல; உலகில் உள்ள மற்றெல்லாத்தொழில்களிலும் வல்லவனாகத் திகழ் கின்றான். இயந்திரத்தொழில் வளர்ச்சியில் அவன் ஈடுபட்டுள்ளான். அவன் கையினால் எதையும் இன்று செய்வதில்லை. இயந்திரத்தின் உதவி கொண்டே எல்லாவற்றையுஞ் சமைக்கின்றான். உணவுப் பண்டங்களைத் தயாரிப்பதிலும் அவன் இன்று இயந்திரங்களை ஈடுபடுத்துகிறான், உரலில் நெல்லைப்போட்டு உலக்கையினால் குற்றி அரிசி யைக் காண்பதில்லை; அதற்குப்பதிலாக இயந்திரத் தின் மூலம் அக்காரியத்தை வெகு சுலபமாக அவன் செய்து கொள்ளுகின்றான். மாவரைக்கும் யந்திரங் கள் வந்தபிறகு அவன் எதையும் அம்மியோடு சண்டைபோட்டு அரைப்பதற்குத் திண்டாடுவ தில்லை.

உணவு வகைகளிலும் அவன் எவ்வளவோ முன்னேற்றமடைந்துள்ளான். எத்தனையோ புது விதமான உணவு வகைகளைப் படைப்பதிலும், சிற்றுண்டிகளை உற்பத்தி பண்ணுவதிலும் தலை சிறந்து விளங்குகின்றான்,

இனி, அவன் கையினால் நூலைநூற்று ஆடை களைத் தயாரித்தானே அன்று அம்முறையில் அமைக்கவே முடியாத அற்புதமான நவநவமான

ஆடைவகைகளை இயந்திரங்கள் மூலமாகச் சமைத்துக் கொள்கின்றான். ஆடைகள் உடுத்துவதிலும் அவன் எவ்வளவோ முன்னேறியிருக்கின்றான். அன்றைய தமிழன் கட்டைவண்டியும், காடை விளக்கும், கைராட்டினமும் இன்று ஆட்சியிலில்லை. இன்று அவன் இயந்திர ஊர்திகளிலும், (எலக்டிரிக்) மின்சார விளக்கின் ஒளியிலும், இயந்திரங்களின் விசையிலும் அல்லவா தன் தேவைகளைப் பூர்த்திசெய்கின்றான். அதுவும் காலவிரயமின்றிக் கஷ்டமின்றி அவற்றைப் பூர்த்தி செய்து கொள்ளுகின்றான். கடலிலும் வானிலும் இயற்கையின் கட்டளைக்கு எதிராகவல்லவா தமிழன் அதனை எதிர்த்தல்லவா திரிந்து வருகின்றான்.

திண்ணைப்பள்ளியிலமர்ந்து தெருமணலில் எழுதியல்ல தமிழன் இன்று கல்வி கற்பது, கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் அமர்ந்து அவன் கல்வி பயிலுகின்றான். இன்று அவன் கையில் பிடிப்பது ஓலைச்சுவடியல்ல; புத்தகங்கள். அவன் அன்று ஒரு மொழியையேயறிவதற்கு வாய்ப்பில்லாதவனாகவிருந்தான். இன்றைய நிலை என்ன ? மிகக் குறுகிய காலத்தில் இவ்வுலகத்திலுள்ள பல மொழிகளையும் அவன் பயின்று தேறவும் முடியும்.

பாய்மரக்கப்பலில், மாதக்கணக்கில், காற்றடிக்குந் திசையில் சென்றல்ல இன்றைய தமிழன் வாணிபம்

வளர்ப்பது. நீராவியந்திரங்கள் இழுத்துச்செல்லத் திசையறியுங் கருவிகள் வழிகாட்ட, குறிப்பிட்ட இடத்திற்குக் குறிப்பிட்ட நேரத்தில் சென்று வாணிபம் வளர்க்கின்றான் தமிழன். அன்று அவன் அடுத்துள்ள தீவுகள் சிலவற்றில்தான் பண்டமாற்று தலை நடத்தினான். இன்று அமெரிக்காபோன்ற கண்டங்களிலும் அவன் வாணிபம் செய்ய முடிகிறது.

இப்படியாக அவன் வாழ்க்கை முறையிலும், தொழில் முறைகளிலும் பிறவற்றிலும் எவ்வளவோ முன்னேறியிருக்கின்றான்.

## ஆட்சி முறை

அரசு முறையை எடுத்துக்கொண்டால் 'முடியாட்சிதான்' அன்று அவன் கண்ட முதன்மை ஆட்சி. இன்று அவன் அதனையே தூக்கி எறிந்து மக்களாட்சியை, ஜனநாயக சுதந்திர ஆட்சியைப் படைக்கவும், திறமையாக நடத்தவும் வளர்ந்திருக்கின்றான். மன்னனும் அவனைச் சூழ்ந்த ஒரு சிலரும் வைத்தது சட்டமென்பது இன்று அவனிடத்தில் செல்லுபடியாகாது. தானே தனக்கு வேண்டிய சட்டங்களைத் தீட்டுவதற்குத் தயாராகிவிட்டான் தமிழன்.

## பொருளாதாரம்

பொருளாதாரத் துறையில் அவனடைந்துள்ள முன்னேற்றம் வியத்தகு முறையி லிருக்கின்றது.

நிலத்தின் மூலமாக, அதில் தான் உபயோகித்த சாதனங்களின் மூலமாகச், சிறு சிறு கைத்தொழில்கள் மூலமாகத் தன் வாழ்க்கைக்கே போதியதல்லாத சிறு பொருளைச் சம்பாதிக்கும் நிலையில் தமிழன் இன்று இருக்கவில்லை. இயந்திரங்களின் துணை கொண்டு இந்த உலகத்திற்கே வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டுமானாலும் ' தயார் ' என்று சொல்லுந் தகுதியைப் பெற்றுள்ளான் தமிழன்.

தொழிற் கூடங்களிலல்ல அவன் இன்று உற்பத்தி செய்வது; தொழிற்சாலைகளில். இயந்திரங்கள்—இராட்சஸ இயந்திரங்களைக் கொண்டு இமயமலைபோல் இயற்கைச் செல்வங்களைப் பண்டங்களாக மாற்றும் பண்புடையவனாகத் தமிழன் திகழ்கின்றான்.

### சமூக நிலை

சமூக நிலை என்று சொன்னால் அவன் இன்று பண்டைய நிலப்பிரபுத்வப் பண்ணையடிமைச் சமூகத்தில் வாழவில்லை. நூதன முதலாளித்வச் சமூகத்தில் வாழ்கின்றான். அங்கிருந்து அவன் சோஷலிஸ சமூகத்தை அமைப்பதற்கு முயன்றுகொண்டிருக்கிறான். ஆணுக்கொரு நீதியும் பெண்ணுக்கொரு நீதியும் பேசிய அந்தச் சமூகத்திலல்ல அவன் வாழ்வது. சாதி உயர்வு பேசித்தருக்கி நின்ற அந்தப்பாழான நிலப்பிரபுத்வ சமூகத்திலல்ல அவன்

இன்று வாழ்வது. சரி, நிகர், சமானமான, தன்னிக ரற்ற வாழ்வில் அடியெடுத்து வைத்துவிட்டான் தமிழன். யார் முயன்ருலும், எவர் தடுத்தாலும், பின்னுக்கு இழுத்தாலும், தமிழனை அந்தப் பாழுஞ் சமூகத்தில் இனி நுழைத்துவிட முடியாது. அந்தச் சமூகப் பானையில் நுழைய முடியாத யானையாகத் தமிழன் வளர்ந்து வாலிபம் பெற்று விட்டான்.

சாதிக்கட்டுப்பாடுகள் அவனைவிட்டு ஓடத் தலைப் பட்டுவிட்டன. அவன் இன்று குண்டு சட்டிக் குள்ளே குதிரை ஓட்டுவதுபோலத் தன் சாதி என் னும் குட்டைக்குள்ளேயே சஞ்சரிக்கும் மீன் குஞ்சு நிலையைத் தூக்கி எறிந்துவிட்டு எவ்வளவோ முன்னேறிவிட்டான்.

மூடப்பழக்கவழக்கங்கள் முனைமழுங்கி இங்கு மங்குமாகத் தலை காட்டுகின்றன் என்று சொன் ஞல் பொருந்துமே ஒழியத் தன்னுட்சி செலுத்து கின்றன என்று சொல்லிவிட முடியாது. கலப்பு மணம், விதவை மணம், புரோகிதச் சடங்குகளற்ற மணம், காதல் மணம் போன்ற நன்முறைகளை நடைமுறையில் நிறைவேற்றுகின்ருன் தமிழன்.

தீண்டாமையைக் கருவேர்றுக்கத் தமிழன் கங்கணமணிந்து விட்டான். அதைப்போற்றிப் பரவிப் புல்லர்களுக்குத் துதிபாட அவன் இன்று தயாராகவில்லை.

### அறிவு முயற்சி !

அறிவு முயற்சிகளை எடுத்துக்கொள்ளுவோம். தமிழன் என்று மில்லாத அறிவு முன்னேற்றத்தை இன்றுதான் பெற்றுள்ளான். சர்வதேசீயக் கண்ணோட்டம் அதாவது உலகைப் பற்றிய சரியான பார்வையைப் பெற்றிருக்கின்றான் தமிழன்; சர்வதேச விவகாரங்களுக்குத் தீர்ப்பளிக்கக்கூடிய தன்மையைப் பெற்றுள்ளான் தமிழன். அவனுக்கு இயற்கையைப் பற்றி இன்று தெரியும். விஞ்ஞான இயல்பு தெரியும். தன்னைப்பற்றியும் தமிழன் தான் என்றும் அறிந்துகொள்ளாத அளவுக்குத் தெரிந்துகொண்டான். " அடியார்க்கு மடியேன் " என்று துதிபாடத் தமிழன் இன்று தயாராகவில்லை என்று மட்டும் சொன்னால் போதாது. அந்த நிலையையே மாற்றியமைத்து உலகமக்களோடு தானும் சரி, நிகர், சமானமாக வாழ்வதற்கான சமத்துவம் பெறத் துடிக்கின்றான் தமிழன். தன்னுடைய தாயகத்தில் வேற்றவர் நிழற்சாயலுங் கூடத் தலைகாட்டுவதற்கு அவன் அனுமதிக்கத் தயாராயில்லை. இன்றுதான் தன் குரலை உலக ரீதியில் ஒலிக்கத், தன் பெருமை உலகில் நிலைபெறத் தனிப்பேரியங்கங்களை உருவாக்கி அவற்றிற்காகத் தன் அரும்பெறல் உயிரையுமளிப்பதற்குச் சித்தமாக விருக்கின்றான் தமிழன். தலைவனுக்கு இன்றுந் தலைபணிவான் தமிழன். ஆனால் தலைவன் தலைவனாகவிருக்கின்றானா ? என்ப

தைத் தயவு தாட்சண்யமின்றி அலசிப் பார்க்க, ஆய்ந்து முடிவு கட்ட அறிவு வளம் பெற்று விட்டான் தமிழன்.

### உண்மை நிலை !

இப்படியாகத் தமிழன் இன்று அடைந்துள்ள முன்னேற்றங்களை அடுக்கிக்கொண்டேபோக முடியும். அது ஒரு இராமாயணமாகப், பாரதக்கதையாக நீண்டுவிடும். எனினும் அவன் இவற்றில் பூரணநிலையைப் பெற்றுவிட்டான் என்று சொல்ல முடியாது. அதுமாத்திரமல்ல; இந்நன்மைகளோடு தீமைகளையும் அவன் பெற்றிருக்கின்றான் என்பதுண்மை. என்றாலும் அவன் வளரவில்லை; பின்னுக்குப் போய்விட்டான் என்று கூறுதல் பொருந்தவே பொருந்தாது.

வளர்ச்சி பெற்றிருக்கின்றான் தமிழன்; ஆனால் அவ்வளர்ச்சியின் பயனைப் பகுத்துண்ணும் பண்பினை அவன் பெறாமல் தீயசக்திகள் தடுத்து வருகின்றன. இதுதான் அவனிடத்தில் இன்று நாம் காண்கின்ற ஏழ்மைக்கும், தாழ்விற்கும், சிறுமைக்கும் காரணம்.

உணவும் உடையும் மலையெனக் குவித்தற்கு நிலப்பரப்பிருக்கிறது; அவற்றை நவீன முறையில் உற்பத்தி செய்ய இயந்திர சாதனங்கள் குவிந்து கிடக்கின்றன. ஆனால் அவற்றை ஒரு சிலர், அதுவுந் தமிழர்களுக்குள்ளேயே சில கோடரிக் காம்புகள் கைப்பற்றிக்கொண்டு அவனைத்

திண்டாடத், தெருவிலேயே விட்டுவைத்திருக்கின்றனர்.

துறவியென்று சொல்லுவான். 'இந்த உலகமும் இதிலுள்ள எதுவும் சதமல்ல' என்பது அவனுடைய கொள்கை. ஆனால் அவனுக்கு **இருபதினாயிரம் ஏக்கர் நிலங்கள்** சொந்தமாயிருக்கும். எல்லாவற்றையும் சதமெனக்கொண்டு இவ்வுலகில் வாழத் துடிக்கின்ற மகனுக்கு இருந்துண்ணவும் நிலமிருக்காது. இது தமிழன் வளரவில்லையென்பதையா காட்டுகின்றது? அவன் வளர்ந்திருக்கின்றான். அவனுடைய வளர்ச்சியில் அவன் கண்ட பெருஞ் செல்வம் பெருச்சாளிகள் கையில் சிக்குண்டு கிடக்கின்றது என்பதைத்தானே காட்டுகின்றது.

வானமளாவும் பாக்டரிகள், தொழிற்சாலைகள் தமிழகத்தில் தலைநிமிர்ந்து நிற்கும். ஆனால் அவற்றிற்குச் சொந்தக்காரர்களாக விரல்விட்டெண்ணும் ஒரு சிறு கூட்டம் இருந்துகொண்டு தமிழனை உறிஞ்சும். இது தமிழனுடைய வளர்ச்சியின்மையையா காட்டுகின்றது? நிலத்துக்குச் சொந்தக்காரர்களாகத், தொழிற்சாலைக்கு முதலாளிகளாக அமர்ந்து சுகபோகத்திலாழ்ந்திருக்கின்றார்களே அவர்கள் தமிழர்களல்லவா? பின்னர்த் தமிழன் வளரவில்லையென்று சொல்வதில் அர்த்தமுண்டா? ஆனால் அதே சமயத்தில் அந்த நிலங்களிலும், பாக்டரிகளிலும் தொழில் செய்யும் ஆயிரக்கணக்கான தமிழர்

கள் அவதிப்படுவது எதனால்? அந்தச் சுய நலக் கூட்டம். தமிழன் தமிழனைச் சுரண்டுகின்றானே; தமிழன் தமிழனை உறிஞ்சுகின்றானே, அதுவே, அந்தச்சுயநலமே தமிழனைத் தீமைக்காளாக்கி நிற்பது. அதை மூடி மறைத்துப் பழியை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் வந்தவன் பேரிலும், வட நாட்டான் பேரிலும், இன்னொருத்தன் பேரிலும் போடுவதற்குச் செய்யும் சிறுமை முயற்சியே "ஏ! சிங்கத் தமிழ்நாடே! நீ எப்பொழுது சிலந் திக் கூடாயினை" என்றெல்லாம் கர்ச்சிப்பது; சரித் திரத்தையே புரட்டுவது.

நிலப்பிரபுத்வக் கொடுங்கோன்மையில் தமிழன் ஆடுமாடுகளைப்போல அடிமைப்பட்டுப் பிரபு நினைத்தால் கட்டிவைத்து அடிக்கவும் முடியும் என்னும் அவலநிலைக்கு ஆளாகி நின்றானே அந்த நிலையைப் பெற்றிருந்த தமிழ்நாடு '**சிங்கத் தமிழ் நாடு**; அந்த அடிமைத்தளை மாத்திரமல்ல; உலகில் எந்த அடிமைத்தளையும் தன்னை அணுக முடியாது" என்னும் போதத்தைப் பெற்று அதை நடைமுறைக்குக் கொண்டுவர மக்கள் கொடியை உயர்த்தியுள்ள இன்றைய தமிழ்நாடு '**சிலந்திக் கூடு**' அதோ பாருங்கள். புதுச்சேரியில் என்ன நடக் கிறது? "பிரஞ்சு ஏகாதிபத்தியம் இனி இம்மண் ணில் இருக்கமுடியாது; இருக்கக்கூடாது" என் பதற்காகத் தமிழர்கள் உலகமே பிரமிப்புக்கொள்

ளும் வகையில் உரிமைப்போரில் இறங்கியுள்ளனர், இதோ திரு—கொச்சி அமளி துமளி படுகிறதே. எதற்காக? தமிழர்கள் ஒன்றுசேரவேண்டும். தமிழகம் ஒன்றுபடவேண்டும் என்பதற்காகத்தானே. இவ்வளவு தமிழன் வளர்ந்து வந்துள்ளானே, இந்த வளர்ச்சியை எடுத்துக்கூறி இதில் உள்ள சிறுமைகளையும் உடன்கூறி இனி முன்னேறவேண்டிய கடமையையும் அவனுக்கு உணர்த்துவதுதானே முறைமை. அதைவிடுத்துச் சரித்திரத்தையே திரித்துப் புரட்டி உண்மையான பிரத்தியட்ச நிலையையே மூடி மறைத்துப் பழைய கதைகளைப் படித்துப் பகைமைகொண்டு பாழாய்ப்போகும் மார்க்கத்தைக் காட்டுவது தமிழர்களை முன்னேற்றுவதற்குச் செய்யும் முயற்சிதானு? இல்லை; முக்காலும் இல்லை என்க.

எனவே, இதுகாறும் நாம் பார்த்த இவ்வாராய்ச்சியின் மூலமாகத் தமிழன் பின்னுக்குப் போகவில்லை. முன்னுக்கு வந்திருக்கின்றான். ஆனுல் முன்னேற்றத்தின் சிகரத்தை அவன் எட்டிப் பிடிக்கவில்லை. அவ்வளவுதான். அப்படியிருக்கும்பொழுது "ஆரியன் வந்தான்; அவன் உன்னைக் கெடுத்தான்; கம்பன் முளைத்தான்; அவன் உன்னைக் கயவனுக்கினுன்" என்றெல்லாம் கதைப்பது சரியா?

ஆரியர் கெடுதல்களையும், கம்பனுடைய கயமைத்தனத்தையும் தமிழன் வென்று எவ்வளவோ

முன்னேறிவந்துவிட்டான். ஆனால் அவன் நடைமுறையில் பின்னே தள்ளப்பட்டிருப்பது தமிழர்களே தமிழர்களைச் சுரண்டிக்கொழுப்பதுதான்; அதன் மூலம் அவர்கள் கூட்டாளிகளாகப் பக்கத்து நாட்டவர்கள் வந்துகூடிக் கொள்ளையடிப்பதுதான். இப்பொழுது வேண்டுவதென்ன? தமிழகத்தில் **சுரண்டல்** தடுக்கப்படவேண்டும். தடுக்கப்பட்டால் தமிழனோடு, வடவனும், இன்னுமுள்ள இதர நாட்டவர்களும் தமிழர்களைச் சுரண்டும் தீயபழக்கம் அடியோடு ஒழிந்து தமிழன் தலைநிமிர்ந்து தன்னுடைய வாழ்வைப் பெற்றுத் தரணியில் உயர முடியும்.

அதனை எப்படிப்பெறுவது? தமிழன் தன்னாட்சியைத், தன்னுடைய நாட்டைத் தானே தன்னிச்சையாகச் சுதந்தர பூர்வமாக ஆளுகின்ற தனித் தமிழக ஆட்சியை நிறுவவேண்டும். அதை அவன் மட்டும் தனித்து நின்று பெறுவது முடியாத காரியம். அவனும், அவனைப்போலத் தன்னாட்சியை ஏற்படுத்தி நன்மையடையவேண்டிய சகல தேசீய இனங்களும் "தேசீய இனங்கட்குச் சுதந்தர சுயேச்சையான தனிக்குடியரசு வேண்டும்" என்னும் கோஷத்தை முன்வைத்து, இந்தத் துணைக்கண்டத்திலுள்ள ஒவ்வொரு தேசீய இனங்களும் எந்தவிதமான மேலாதிக்கமுமற்ற 'சுதந்தர ஆட்சியை' நிறுவி, அவையனைத்தும் இஷ்டபூர்வமாக '**சம அந்**

**தஸ்து'** என்ற அடிப்படையில் இணைந்து நிற்கின்ற ஒரு சமஷ்டியின் கீழ்—கூட்டாட்சியின் கீழ் திரளுவதற்கான கிளர்ச்சியில் முதற்கண் ஈடுபட்டாக வேண்டும். பிரிவது, பிரிந்து தனியாட்சியை நிறுவுவது எல்லாம் இதற்கு முன் என்றுமில்லாத நேசபாவத்துடன் பரஸ்பர உதவி ஒத்தாசையுடன் இந்நாட்டிலுள்ள எல்லா தேசிய இனங்களும் "**கூடி வாழ்வதற்கு**" என்னும் கொள்கைக்காகவே என்கின்ற போதத்துடன் கூடி நின்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவதில் எப்படிப்பட்ட உருக்குபோன்ற ஒற்றுமையுடன் நாடு, மொழி, இன, கலாசார வேற்றுமையின்றிப் போராடினேமோ அதைவிடப் பன்மடங்கு ஒன்றுபட்டு நின்று **தேசிய இனக்குடியரசுகளை** மலரவைப்பதற்காகப் போராடியாகவேண்டும். அப்பொழுது தான்—இமயமுதல் குமரிவரையிலுள்ள எல்லா தேசிய இனங்களும் ஒரே கோஷத்தினடிப்படையில் திரண்டெழுவதன் மூலமாகத்தான் ஒவ்வொரு தேசிய இனங்களும் தங்கள் தங்கள் சுதந்தரக் குடியரசுகளை நிறுவ முடியும்.

இங்கே நின்று பாருங்கள். என்றே நிகழ்ந்த வடவர் தமிழர்போராட்டங்களையோ, அல்லது ஒருவர் மற்றவர்மீது ஆதிக்கஞ்செலுத்தியதையோ, தீமைகள் புரிந்ததையோ இன்று பேசிப் பகைமைத் தீயை வளர்ப்பது தமிழன் தன் தமிழகத்தைச்

சுதந்திர சுயேச்சையான குடியரசினை நிர்மாணிப்ப தற்கு உதவிசெய்வதா? அல்லது அந்த மகத்தான முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்கான பிள வுப் பாதையில் மனித சாதியை அழைத்துச்செல்லும் நாசகரமான தீய முயற்சியா? என்பதைக் கூர்ந்து நோக்குங்கள். இத்தகைய **பழங்கதை** பேசுவது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போட்டுப் பிற்போக்காளர்கள் "தேசத்தைத் துண்டாடக் கூடாது; தாயைக் கூறுபோடக் கூடாது" என்று போடும் அப்பட்டமான, அர்த்தமற்ற கோஷத்திற்கு ஆதரவுதேடும் அசலான பிற்போக்கு முயற்சியே என்பது உங்களுக்கும் மிக நன்ருகத்தெரியும்.

## கம்பராமாயணம்

இனிக் கம்பராமாயணத்தைப் பற்றிய பிரச்சினைக்கு வருவோம்.

"தமிழனுகிய கம்பன்—தமிழ்ப்புலவனுகிய கம்பன், ஆரியர் கதையாகிய இராமாயணத்தை அதனை முதலில் தந்த வான்மீகிக்கு மாறுபட்டு, ஆரியரை உயர்த்தித் தமிழர்களை இழிவு படுத்துகின்ற முறையில் பாடியிருக்கின்ருன், ஆதலால் தமிழரை இழிவுபடுத்தும் அக்கா வியத்தைச் சுட்டெரித்தாலல்லது தமிழர் முன் னேற முடியாது" என்று கூறுகின்றனர்.

கம்பன் ஒரு தமிழன்; தமிழர்களிலேயே தலை சிறந்த தமிழன்; தமிழ்ப்புலவன் மட்டுமல்ல;

புலவர் சிகாமணி. இதில் நமக்கு வேறுபாடில்லை. இராமாயணம் ஆரியர் கதை. இதிலும் நமக்கு ஆட்சேபணையில்லை.

ஆனால் கம்பன் 'ஆரியர் கதை' என்று அதனைக் கொள்ளவில்லை, அவன் வாழ்ந்தகாலத்தில் ஆரியர் தமிழர் வேறுபாடேயில்லை. இருசாரரும் ஒன்றிக் கலந்து இரண்டற வாழ்ந்தகாலம் அது.

கம்பன் கி. பி. பன்னிரண்டாவது நூற்றுண்டில் வாழ்ந்தவன் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஒன்று, ஆழ்வார்களும், சமயா சிரியர்களில் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் அவனுடைய காலத்திற்கு முந்தியவர்கள் என்பதும் மறுக்கமுடியாத ஒன்று.

அங்ஙனமாயின், ஆழ்வார்கள் **கண்ணனையும் இராமனையும்** கடவுளர்களாகக் கொண்டு வழிபடுவ தோடு பாரத இராமாயணக் கதைகளில்வரும் அருங் கருத்துக்களையுந் தம் பாடல்களில் பெய்திருக் கின்றனர். பின்னர்க் கம்பன் இராமனுடைய கதையை 'ஆரியர் கதை' என்று கொண்டான் எனக்கூறுதல் பொருத்தமுடையதாகாதல்லவா? ஆழ்வார்கள் காலத்திலேயே இராமாயணம் ஆரி யர்க்கும் தமிழர்க்கும் பொதுவான கதையாகிவிட் டது. ஆகவே இக்குற்றச்சாட்டு செல்லாது.

சமயாசிரியர்களை எடுத்துக்கொண்டால் அவர் களுள் **அப்பர்,**

" ஆரியன் கண்டாய்; தமிழன்கண்டாய்
ஆரியமுஞ் செந்தமிழும் ஆனான்கண்டாய் "

என்று தம் இறைவனைப் பாடிப்பரவுகின்றார். இதிற்போந்துள்ள கருத்து " ஆரியர் வேறு; தமிழர் வேறு " என்னும் இனப்பிரிவுக்கு முற்றுப்புள்ளி வைத்து ஆரியர், தமிழர் சமரசக் கொள்கையை வலியுறுத்துகிறது.

இவரை உள்ளிட்ட மூவரும் பாடியுள்ள தேவாரப் பாடல்களில் ஆரியர் கதைகள் சம்பந்தப்பட்ட குறிப்புகள் ஆங்காங்கே விரவிநிற்றலைக் காணலாம். இனிக் கந்தபுராணக் கதை, இது மிகப்பழைய காலந்தொட்டே தமிழகத்தில் நிலவிவருவது. இதிலிருந்துதான் இராமாயணம் வந்ததென்று கூறுவாருமுளர். கதைப்போக்கில் கந்தபுராணமும், இராமாயணமும் ஒரு தன்மையவை. அங்கே முருகன் என்றால் இங்கே இராமன்; அங்கே சூரபன்மன் என்றால் இங்கே இராவணன்; அங்கே பானுகோபன் என்றால் இங்கே இந்திரசித். அங்கே வீரவாகுவென்றால் இங்கே அநுமான். பெயரளவில்தான் இப்பாத்திரங்கள் வேறுபடுகின்றனவேயன்றித் தன்மையில் ஒரே அச்சில் வார்க்கப்பட்டவை என்னலாம். இத்தன்மையினதாகிய இக் கந்தபுராணக் கதை ஆரியர் கதையே. தமிழ்க்கதையன்று. இவ்வுண்மையினை, மறைந்த பெருந் திருவினராகிய **மறைமலையடிகளார்** ' கந்தபுராணத்துள்வரும் **முருகன்**

ஆரியநாட்டு மன்னவனே' என்றும், 'அவன் இலங்கைத் தீவின்கண் அரசாண்ட 'சூர்' என்னும் மன்னவனோடு பொருத வரலாறே அப்புராண' மென்றும் குறித்தல் கொண்டுணர முடியும். கம்பனுக்கு முந்திய காலத்திலேயே இக்கதையைத் தமிழ்ச் சான்றோர்கள் ஏற்று முழுக்க முழுக்கத் தங்கள் பெருங்கதையாகவே அதனைப் போற்றிப் பரவிவந்துள்ளனர் என்பதை நாம் பார்க்கின்றபோது 'இது ஆரியர் கதை' 'இது தமிழர் கதை' என்னும் வேறுபாடே கம்பனுடைய காலத்திலும் சரி, அவனுக்கு முந்திய காலத்திலுஞ் சரி, தமிழகத்தில் இருந்ததில்லை. எனவே, இல்லாத ஒன்றை இருந்ததாகக் கற்பனைப்படுத்தி அதனைக் கம்பன்மீதேற்றிக் குறைகூற முற்படுதல் அறிவுடைமையாகாது என்பது மட்டுமல்ல; இது சரித்திரத்தையே புரட்டித் திரித்துக் கூறுவதுமாகும்.

இல்லை. அவர்கள் கூறுவதுபோலவே கம்பன் இராமாயணத்தை ஆரியர் கதையாகவே கொண்டான் என்று வைத்துக்கொண்டாலும் இழுக்காவதொன்றில்லை.

தமிழன் ஆரியர் கதையைக் கூறுதல் தவறென்று இன்றைக்கும் அறிஞர்கள் கூறத் துணியார். உலகில் எப்பாகத்தில் வாழ்கின்ற புலவனும், உலகின் எப்பாகத்துக் கதையை வேண்டுமானாலும் எடுத்தாளலாம்; விரித்துரைக்கலாம். ஏற்றலாம்;

போற்றலாம். நாம் அராபிதேசக் கதைகளைக் கூறுதல் தவறல்லவே. ஆங்கில நாட்டுப் புலவர்களியற்றிய கதைகளை நாம் எடுத்தாளுகிறோம். அப்படியே நம் தாய்மொழியில் பெயர்த்துத் தருகிறோம். அது இன்றைய சமூக வளர்ச்சிக்கு ஏற்ற சிறந்த பணியாகவும் போற்றப்படுகிறது. அங்ஙனமாயின் இராமாயணத்தைக் கம்பன் ஆரியர் கதையென்றுகொண்டிருந்தாலும் அதைக் குறை சொல்லுதற்கில்லை.

இறுதியாகத், தமிழ்ப்பெரும்புலவரும், சென்னை சர்வகலாசாலைத் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவருமாகிய தமிழ்ப் பெருந் திருவினர் எஸ். **வையாபுரிப் பிள்ளை** அவர்கள் "தமிழர் பண்பாடு" என்னுந் தாமியற்றிய நூலில் இதுபற்றிக் கூறுவதைக் கவனியுங்கள்.

"**இராமசரிதம் பாரததேசம் முழுமைக்கும் உரியதோர் பொதுவுடைமை.** பொதுவுடைமையாய் அமைந்தது சமீப காலத்தோ அல்லது சில பல நூற்றாண்டுகளுக்கு முன்போ நேர்ந்தது என நினைப்பது தவறு. **மிகப் பூர்வ காலந்தொட்டே இங்ஙனம் அமையப் பெற்று வருவதாகும்.**"

இது பிள்ளையவர்கள் தமிழகத்தின் மிகமிகப் பழைய இலக்கியங்களைத் துருவிஆய்ந்ததன்பலனைகப் பெற்ற பேருண்மை. எனவே, கம்பன் 'ஆரியர் கதை' யென்று இராமாயணத்தைப் பிரித்துப்

பார்த்து, அதைக் கூறுவதன்மூலம் ஆரியரை உயர்த்தவும், தமிழரைத் தாழ்த்தவும் முற்பட்டுள்ளான் என்று கூறுவது இனவெறி தலைக்கேறியுள்ள நிலையில் கூறுகின்ற பிதற்றல் என்றே கொள்ளல் வேண்டும். பழந்தமிழ் நூல்கள் இராமாயணத்தைப் பொதுவுடைமையாகக் கொண்டியற்றியுள்ள பாடல்களையும் அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள். அவற்றைக் காண்க. புறநானூற்றில்,

"கடுந்தே ரிராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வவ்விய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை யிழைப்பொலிந் தாஅங்கு
அருஅ வருநகை யினிதுபெற் றிடுமே."
(புறம் : 378)

எனவும், அகநானூற்றில்

"வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பெளவ மிரங்கு முன் துறை
வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீ ழாலம் போல
ஒலியவிந் தன்றால் இவ் வழுங்க லூரே" (அக. 70)

எனவும், பிற சங்க நூல்களுள் கலித்தொகையில்

"இமயவில் வாங்கிய ஈர்ஞ்சடை யந்தணன்
உமையமர்ந் துயர்மலை யிருந்தன னாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையிற் கீழ்ப்புகுத் தம்மலை
எடுக்கல் செல்லா துழப்பவன் போல" (38)

என்வும், பரிபாடலில்

"இந்திரன் பூசை ; இவள் அகலிகை : இவன்
சென்ற கவுதமன் : சினனுறக் கல்லுரு
ஒன்றிய படியிது என்றுரை செய்வோரும்" (19)

'என அகலிகை சாபம் பற்றிய சித்திரம் திருப்பரங் குன்றத்துச் சித்திரமண்டபத்தில் வரையப்பட்டிருந்ததெனக் குறிக்கப்பட்டுள்ளது' எனவும் வருகின்றவை பிள்ளையவர்கள் அருங்கருத்தினை அணி செய்து நிற்கின்றன.

சங்க இலக்கியங்களுக்கு இல்லாத ஒரு தனிச் சிறப்பு கம்பராமாயணத்திற்கு ஏன்? என்றுதான் இவர்கள் கரைகின்றனர். இச்சங்க நூல்களும் அவ் இராமாயணத்தைக் கூறுகிற பான்மையைக் கண்டாவது திருந்துவார்களாக!

'கம்ப ராமாயணத்திற்கு முந்தியே தமிழகத்தில் தமிழ் மொழியிலேயே இராமாயணம் ஒன்று இயற்றப்பட்டு அது பின்னெழுந்த கம்பராமாயணத்தால் வழக்கொழிந்து போய்விட்டது' என்றெண்ணும் படியாகப் பல உதிரிப்பாட்டுகள் ஆங்காங்கே தொகைநூல்களில் காணப்படுகின்றன. உரையாசிரியர்கள் சில பாட்டுக்களை எடுத்துக்காட்டாகக் கூறியுள்ளனர். இவ்வுண்மையினையும் பிள்ளையவர்கள் அரிதாராய்ந்து வெளியிட்டு உதவியுள்ளார்கள். நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பொருளதிகார உரையில் காட்டியுள்ள செய்யுட்களில் ஒன்று;

“கடலு மலையும் நேர்படக் கிடந்த
மண்ணக வளாகம் நுண்வெயிற் றுகளினும்
நொய்தா லம்ம தானே இஃதெவன்
குறித்தனன் நெடியான் கொல்லோ மொய்தவ
வாங்குசிலை யிராமன் தம்பி யாங்கவன்
அடிபொறை யாற்றி னல்லது
முடிபொறை யாற்றலன் படிபொறை குறித்தே.”
(தொல்–பொருளதி. 76–நச்.)

‘புறத்திரட்டு’ என்னுந்தொகை நூலிற் காணப் படும் இராமாயணத்தைச் சேர்ந்த பாட்டு ஒன்று.

“இருசுடர் வழங்காப் பெருமூ திலங்கை
நெடுந்தோ ளிராமன் கடந்த ஞான்றை
எண்இடை மிடைந்த பைங்கட் சேனையிற்
பச்சை போர்த்த பல்புறத் தண்ணடை
எச்சார் மருங்கினும் எயிற்புறத் திறுத்தலிற்
கடல்சூ ழரணம் போன்ற
உடல்சின வேந்தன் முற்றிய வூரே”
(புறத், 1333)

சிலப்பதிகாரத்தில் கூறப்படும் இராமாயணச் சரித்திரப் பகுதியையும் இங்கே தெரிந்து கொள்ளல் நல்லது.

“பெருமகன் ஏவ லல்லது யாங்கணும்
அரசே தஞ்சமென் றருங்கான் அடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும்பே துற்றதும்
(xiii 63–66)

இனிப் 'பெருங்கதை'யில் வருங் குறிப்பையுங் காணுங்கள்.

" இறைமீக் கூறிய விராமன் தம்பி
மறுவொடு பெயரிய மதலைக் கியைந்த
ஆனைப் பெரும்புகழ் யாமும் எய்தத்
தேனார் தாமரைத் திருந்துமலர்ச் சேவடி
வழிபா டாற்றுதும் (iii 24. 90–4)

எனவே, இராமாயணம் ஆரியர் கதை என்றுதான் கம்பன் தேர்ந்தெடுத்தான் என்று கூறல் பிழைபாடுடையது.

இனிக் கம்பன் 'வான்மீகிக்கு மாறுபட்டான்' என்பது.

வான்மீகி கிறித்து பிறப்பதற்குச் சிறிதேறக் குறைய இரு நூறாண்டுகட்கு முன்னர் வாழ்ந்த புலவன். கம்பனோ கிறித்து பிறந்த பன்னிரண்டாவது நூற்றாண்டில் வாழ்ந்தவன். இரு புலவர்கட்கும் இடையில் ஏறக்குறைய ஆயிரத்து நானூறு ஆண்டுகள் உருண்டோடியிருக்கின்றன. அதனை நாம் மனத்துட் கொள்ள வேண்டும்.

வான்மீகி இராமாயணத்தை முதலில் தந்தவர் என்பதும் அவ்வளவு சரியல்ல ; அவருடைய காலத்திற்கு இருநூறாண்டுகட்கு முன்னதாகவே '**தசரத காதை**' என்னும் பௌத்த சமய நூல் இருந்திருக்கிறது. ஆனால் அதிலுள்ள இராமாயணம் இன்றுள்ள இராமாயணத்திற்கும், குறிப்பாக வான்மீகியாற்

கூறப்பட்டுள்ள இராமாயணத்திற்குமே கருத்தில், கதையமைப்பில் முற்றிலும் மாறுப்பட்டது. அதன் கண் இராமனுக்குச் **சீதை** தங்கையெனக் குறிப்பிட்டுள்ளது என்பதும், தன் தந்தையார் கட்டளையால் அரசு துறந்து சென்ற இராமன் இமயமலைச் சாரலிற் சென்று வைகிப் பன்னீரியாண்டு கழித்து வந்துதனதரசைக் கைக்கொண்டான் எனும் அவ்வளவிலேயே கதை முடிவுறுகிறது என்பதும் கருத்திற் கொள்ளவேண்டியவை.

இதைத் தான் வான்மீகி முற்றிலுந்திரித்துப் புரட்டிப் புனைந்து இன்றுள்ள கதைப் போக்குக்கு மூலவித்திட்டிருக்கின்றார்.

இன்றுள்ள வான்மீகி ராமயணத்தையும் கம்பராமாயணத்தையும் எடுத்துவைத்துக் கொண்டு பார்த்தால் வான்மீகியைக் கம்பன் மாற்றியிருக்கிறான் என்று தான் நமக்குத்தோன்றும். ஆனால் சரித்திரத்தை ஆராய்ந்தால் வான்மீகியைக் கம்பன் திருத்தவில்லை. வான்மீகிக்குப் பின்னும், கம்பனுக்கு முன்னும் வந்த புலவர் சிகாமணிகளே அதைச் செய்துள்ளனர் என்னும் பேருண்மை நமக்குப் புலனாகாமற் போகாது. இதனால் கம்பன் வான்மீகியை எந்த வகையிலும் திருத்தவில்லை என்பது கருத்தல்ல, திருத்தியிருக்கின்றான். ஆனால் அத்திருத்தங்கள் காற்பங்கு (அவையும் காலத்தால் வேறுபட்ட பண்பாட்டின் திருத்தங்களே. நாகரிகச் செழுமை

யைப் புலப்படுத்தும் திருத்தங்களே) அவனுக்கு முந்திய புலவர்கள் திருத்தியுள்ளவையே முக்காற் பங்கு. இதை நாம் பகுத்துணர்ந்தாதல் வேண்டும்.

வான்மீகி இராவணனுக்குப் பத்துத்தலைகளையும் இருபது கரங்களையும் படைத்துக் கூறவில்லை. கம்பன் அவையிரண்டையும் படைத்துக்கூறுகின்றான். சரித்திரத்தைப் பாராமல் இவ்விரண்டை மட்டும் பார்க்கின்றவர்கட்குக் கம்பன்மீது ஆத்திர மேற்படுவது இயற்கை. அதனால் நிதான மிழத்தல் அறிவுடைமையாகாது.

வான்மீகியின் இராவணன் நானூறு ஆண்டுகள் வரை அதாவது கி. மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி. பி. இரண்டாம் நூற்றாண்டுவரையிலும் ஒரு தலையும், இரண்டு கைகளையுமுடையவனாகவே யிருக்கின்றான், ஆனால் இரண்டாம் நூற்றாண்டிற்குப்பின்னே வந்த புலவர்களால் அவன் பத்துத் தலைகளையும், இருபது கரங்களையும் உடையவனாகச் சித்தரிக்கப்பட்டுவிட்டான், எனவே இந்த மாற்றத்தைக் கம்பன்மீது நாம் ஏற்றமுடியுமா ?

ஆழ்வார்களும், சமயாசிரியர்களும் இராவணனுக்குப் பத்துதலைகளையும் இருபது கரங்களையும் படைத்துவிட்டனர். நாலாயிரப் பிரபந்தத்திலும், தேவாராத்திலும் ஒரு தலையும், இரண்டு கைகளுமுடைய இராவணனை நாம் காண்டல் அரிது. இதோ அவர்கள் கூறுவதைக் கேளுங்கள்.

" ஆய்ந்த வருமறையோ னன்முகத்தோ னன்குறங்கில்
வாய்ந்த குழவியாய் வாளரக்கன் — ஏய்ந்த
முடிப்போது மூன்றேழென் றெண்ணினா னார்ந்த
அடிப்போது நங்கட் கரண் "

— நான்முகன் திருவந்தாதி.

திருமழிசை ஆழ்வார் பாடியுள்ள இப்பாடலில் இராவணனுடைய தலைகள் 'மூன்று ஏழ் அதாவது மூன்றும் ஏழும் ஆகிய பத்துத்தலைகள் என்பது குறிக்கப்பட்டிருத்தலைக் காணுங்கள்,

இதில் இன்னும் ஒரு வேடிக்கை இராவணன் பத்துத்தலைகளுள் ஒன்பது தலைகளை மறைத்துக் கொண்டு பிரமனிடத்தில் வரங்கேட்கின்றபொழுது, திருமால் குழவி வடிவங் கொண்டு மறைந்திருந்த அவன்முகங்கள்ஒன்பதனையும் பிரமனுக்குஎண்ணிக் கூறினார் என்பது இப்பாட்டில் வரும் கதை. எப்படி ? இராவணனுக்குப் பத்துத்தலை பிரம லோகத்திலிருந்து புறப்படுகிறது.

" கொடுத்தார்புரமூன் றெரியச்சிலைமே லெரியொண்
[பகழியான்
எடுத்தான் றிரடேர்ண் முடிகள்பத்து மிடியவிரல்
[வைத்தார் "

என்று திருஞானசம்பந்தரும்,

" கருந்தடங் கண்ணியுந் தானுங்
கடந்தைக் காரோணத்தான்
இருந்த திருமலை யென்றிறைஞ் சாதன்
றெடுக்கலுற்றான்

பெருந்தலை பத்து மிருபது தோளும்
பிதிர்ந்தலற
இருந்தரு ளிச்செய்த தேமற்றுச் செய்தில
னெம் மிறையே. "

என்று திருநாவுக்கரசரும், இப்பாடல்களினாலும், இன்னுமுள்ள அவர்கள் அருமைச் செழுந்தமிழ்ப் பாடல்களினாலும் இராவணனுக்குப் பத்துத்தலைகளை யும் இருபது கரங்களையும் படைத்துக் கூறுதலை நாம் காணமுடியும்.

இன்னுஞ்சொன்னால் இந்த இயற்கைக்கு மாறான பத்துத்தலை அமைப்பு திடீரெனத் தோன்றிவிட வில்லை. இராமாயணத்துக்கு முந்தியது கந்த புராணக் கதை என்பதை நாமும் கூறியிருக்கிறோம். உண்மையும் அதுவே.

அங்கே முருகன் ஆறு முகங்களும் பன்னிரு கரங் களுமுடையவனாகப் படைக்கப்பட்டிருக்கின்றான். சைவ வைணவச் சண்டை ஓய்ந்ததெல்லாம் சமீப காலத்தில்தான். அந்நாளில் அதுதானே நிகழ்ச்சி நிரலிற் கண்ட அற்புதமான விஷயம். சைவர்கள் தங்கடவுளுக்கு ஆறுதலைகளென்றால், வைணவர்கள் அவரினும் இளைத்தவர்களா? பார்த்தார்கள். அப் படியே தங்களுடைய கடவுளுக்குப் பத்துத்தலை களைப் படைக்கவும் அவர்கட்குச் சம்மதமில்லை. அதனினும் ஒருபடி மேலே செல்ல அவர்கள் ஆசைப்பட்டனர்.

ஒரு தலையுடைய சூரபன்மனைக்கொல்ல உங்கள் கடவுளுக்கு ஆறு தலைகள் வேண்டி யிருந்தன. அது அவ்வளவு அற்புதமல்ல; இதோ பாருங்கள். ஒருதலையுடைய எங்கள் கடவுள் பத்துத்தலைகளை யுடைய இராவணனைக் கொன்றிருக்கின்றார். இது எப்படி? பராக்கிரமத்தைப் பாருங்கள்! என்று கூறுவதற்காகவே இராமனுக்குக்கூடப் பத்துத்தலைகளைப் படைக்காமல் இராவணனுக்குப் பத்துத்தலைகளைப் படைத்திருக்கின்றனர்.

வான்மீகியால் குறிக்கப்படாத பத்துத்தலைகளைப் படைத்துக்கூறினோர் அவ்வளவோடும் நின்றாரில்லை. தங்கள் படைப்பினை வான்மீகியாற் செய்யப்பட்டுள்ள இராமாயணத்திலும் அதனைப் பிற்காலத்தில் செருகிவிட்டனர். இதுதான் வேடிக்கை. இதனால் இன்று வான்மீகி பத்துத்தலைகளைப் படைக்கவில்லை என்பதை நூல் முழுவதையும் ஆய்ந்து முடிவு காண்போரே காண்டலியலும்.

அங்கே பலவிடங்களில் அவன் ஒரு தலையும், இருகரங்களுமுடையவனாகவே வருணிக்கப்படுகின்றான் என்பதையும், பின்னர்ப் பத்துத்தலைகளைப் படைத்திட்டவர்களே அதனை வான்மீகி இராமாயணத்திற் சேர்த்திருக்கின்றனர் என்பதையும், ஆரிய, ஆங்கிலத், தீந்தமிழ் மொழிகளில் நிறை திருவாளராகிய மறைமலையடிகளார் தாமியற்றிய 'மாணிக்க வாசகர் வரலாறுங் காலமும்' என்னும் அரியநூலில்

எடுத்துக்காட்டியுள்ளார். அப்பகுதியைக் காணுங்கள்,

"இராவணனுக்குப் பத்துத்தலைகளும் இருபது தோள்களும் இருந்தன என்பது பழைய இராமாயணப் பகுதிகளிற் பெறப்படவில்லை. இலங்கையிற் சீதையைத் தேடச்சென்ற அநுமான் இராவணனது அரண்மனையுட் புக்குச் சென்றுழி இராவணன் பருத்த தலையுங் கழுத்தும் உடையனாய்க் கட்டிலின்மேல் உறங்குதலைக் கண்டான் என்னும் அவ்வளவே சொல்லப்பட்டிருக்கின்றது. இராவணன் போர்க்களத்தில் வந்து நின்றக்காலும் ஒற்றைத்தலையும் இரண்டுகண்களும் உடையனாகவே இருந்தமை குறிக்கப்பட்டிருக்கின்றது. போர்க்களத்தில் இராமன், இராவணனைக்கண்டு உரை கூறினமை சொல்லுகின்றவிடத்தும், அவன் மக்களெல்லாரையும்போல் ஒரேதலையுடையனாயிருந்தனனெனவே சொல்லப்பட்டிருக்கின்றான்"

எனவும்

"முதலில் இராமாயண கதையை ஆக்கியோர் அவனை ஏனைமக்களைப்போன்ற வடிவுடையனாகவே வைத்துக் கதைபுனைந்தாரென்பதூஉம், கி. பி. இரண்டாவது நூற்றாண்டிற்குப்பின் அக்கதையைப் பெருக்கி வரைந்தோரே அவனுக்குப் பத்துத்தலையும் இருபதுகையும் ஏற்றிவிட்டனரென்பதூஉம் இனிது புலனாம்"

எனவும்

"இவ்வாறு 'வான்மீகி இராமாயணத்' தின்கட் காலங்கடோறும் பிற்பின் வந்தோரால் எழுதியெழுதிச் சேர்க்கப்பட்டவைகள் பற்பல,"

எனவும் கூறிப்போதருகிறார். எனவே, இம்மாறு

பாடு வான்மீகிக்குப் பின்னும் கம்பனுக்கு முன்னும் வந்த புலவர்கள் கட்டிவிட்டகதையே யாதல் திண்ணமாம், பின்னர் இதைக் கம்பன்மீது ஏற்று தல் நியாயமா ; நியாயமல்ல.

### இராமாவதாரம்

இனி 'வான்மீகி இராமனைக் கடவுளாக்கவில்லை ; கம்பனே அவனைக் கடவுளாக்கிவிட்டான்' என்பது. இதில் வான்மீகி இராமனைக் கடவுளாகக் கூறவில்லை என்பதுண்மை. ஆனால் கம்பன்தான் இராமனைக் கடவுளாக்கினன் என்று கூறுதல் அப்பட்டமான பொய்க்கூற்று; சரித்திரப்புரட்டு.

பாருங்கள் கி,பி இரண்டாம் நூற்றாண்டில் இயற் றப்பட்டவை 'சிலப்பதிகாரமும்' 'மணிமேகலை' யும் என்பது எவரும் ஒப்புக்கொள்ளுகிற ஒன்று. அதாவது இன்றிலிருந்து 1800 ஆண்டுகட்குச் சிறிதேறக்குறைய இவ்விருநூல்களும் இயற்றப்பட் டுள்ளன என்பது தேற்றமாம். ஆயின், கம்ப னுடைய காலத்திற்கு ஓராயிரம் ஆண்டுகள் முந்தி யவை இப்பழந்தமிழ் நூல்கள். இவற்றுள் '**மணி மேகலையில்**' இராமன் கடவுளாக வருணிக்கப்படு கிறான். இதைநோக்க இந்நூல் இயற்றப்படுவதற்கு முன்னரே இத்தென்றமிழ் நாட்டில் இராமன் கடவுளாக்கப் பட்டிருக்கிறான் என்பது தெளிவாகி றது. ஆகவே, கம்பனுக்கு ஆயிரம் ஆண்டு களுக்கு முன்னமேயே "இராமன் கடவுளாக்கப்

பட்டிருக்கும் இப்பேருண்மையினை அறிய வலியற்றோர் கம்பன்தான் வான்மீகிக்கு மாறுபட்டு இராமனைக் கடவுளாக்கியவன் " என்று கூறுதல் எள்ளி நகையாடற்பால தொன்றாகும். மணிமேகலையில் வரும் **காய சண்டிகை** என்னும் வித்யாதர மகள் தான் முனிவருடைய சாபத்தால் பெற்ற **யானைத் தீயின்** (பசியின்) கொடுமையைச் சித்திரிக்கும் முகத்தால் கூறுகின்ற உரையினைப் பாருங்கள். பார்த்துக் கம்பன் தான் இராமனைக் கடவுளாக்கினான் என்று கதைக்கின்றவர்கள் எப்படிச் சரித்திரத்தையே புரட்டித் திரித்துப் புலம்புகின்றனர் என்பதைத் தெரிந்து தெளியுங்கள்.

**" நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி**
**அடலருமுந்நீ ரடைத்த ஞான்று**
**குரங்கு கொணர்ந்தெறிந்த நெடுமலையெல்லாம்**
**அணங்குடையளக்கர் வயிறுபுக்காங்கு**
**இட்டது பற்றாக் கட்டழற் கடும்பசிப்**
**பட்டேன் என்றன் பழவினைப் பயத்தால் "**

என்பது. இம்மணிமேகலைப் பாட்டில், நெடியோனாகிய திருமால் இந்நிலமிசைத் தோன்றி வானரர்களைக் கொண்டு கடலையடைத்தது வரைத் தெளிவாகக் கூறப்படுதலைக் காண்க. குரங்குகளைக் கொண்டு கடலையடைத்தவன் இராமனே. அவனையே " நெடியோன் மயங்கி நிலமிசைத்தோன்றி " என்னுந் தொடர்குறித்தலை நோக்குவார்க்குத் தமிழி

லக்கியங்களில் மிகப்பழைய ஐம்பெருங்காப்பியங் களுள் ஒன்ருகிய மணிமேகலையிலேயே ' இராமன் கடவுளின் அவதாரம் ' என்பது திட்டவட்டமாகக் கூறப்பட்டிருப்பதை இனிது காணமுடியும்.

மணிமேகலை வைணவசமய நூலன்று; அது பௌத்தசமயத்தைச் சார்ந்த தமிழ் நூலாகுமென் பதைக் கருத்துட்கொள்ளின், இந்நூலாசிரியர் இராமனைக் கடவுளாக்கி யிருக்கக்கூடும் என் றெண்ண இயலாது. பௌத்தசமயம் கடவுள் அவ தாரத்தை ஒத்துக்கொள்ளும் கடப்பாடுடையது மன்று. எனவே, பிற சமயத்தவரும் ஒத்துக்கூறு கின்ற அளவுக்கு அன்று தமிழகத்தில் இராமவ தாரம் நிலைபெற்றிருந்திருக்கின்றது என்னும் வரலாற் றுண்மையை நாம் உய்த்துணர முடியும்.

இங்ஙனமெல்லாம் நமக்கு வரலாறு உணர்த்து கின்றபொழுதே இச்சரித்திரப் புரட்டர்கள் இவ்வா றெல்லாம் பொய்யுரை புகன்று தங்கள் இனப்பகை யூட்டும் இழிதகை நெறியை இந்நாட்டிற் பரப்ப முயலுகின்றனர்.

ஆழ்வார்களிற் பலரும் இராமனைக் கடவுளாகப் புனைந்துபாடி மகிழ்ந்திருக்கின்றனர். எனினும் அவர்களுள் குலசேகர ஆழ்வாரே மிகவும் அவ்வழி யில் உருகிப்பாடிக் கற்போருள்ளங் கரைந்துருகச் செய்திருக்கின்ருர். இவர் கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டிற்கும் பத்தாம் நூற்ருண்டிற்கும் இடை

யிலிருந்தவர் என்னலாம். எப்படியும் இவர் கம்ப னுக்கு முந்தியவர். எள்ளத்தனையும் ஐயத்திற் கிடமேயில்லை.

இனிக், குலசேகர ஆழ்வார் இராமனைப் பாடிப் பரவியுள்ளதை நோக்குங்கள்,

"மன்னுபுகழ்க் கௌசலைதன்
மணிவயிறு வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன்முடிகள்
சிந்துவித்தாய் செம்பொன்சேர்
கன்னிநன்மா மதிள்புடைசூழ்
கணபுரத்து என்கருமணியே!
என்னுடைய இன்னமுதே!
இராகவனே! தாலேலோ!"

—பெரு. திரு. (8 ஆந் திருமொழி. 1-வது பாட்டு.)

இப்பாடலிற் போந்துள்ள கருத்தென்ன?

'தசரதனுடைய முதல் மனைவியாகிய' கௌசலை யின் மணிவயிறு வாய்த்தவனும், அதாவது அவள் திரு வயிற்றிற் பிறந்தவனும், தென்னிலங்கை மன்னவனாகிய இராவணன்றன முடிகள் அதாவது சிரங்கள் அற்றுவிழச்செய்தவனும், திருக்கண்ண புரம் என்னுந் திருத்தலத்தில் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கின்ற **திருமாலே**—கடவுளே யாவான்' என்பது.

'கணபுரத்து என் கருமணியே என்னுடைய இன்னமுதே! **இராகவனே!**' என்பவற்றை நோக் குக! இராகவன் என்பது இராமனின் மாற்றுப்

பெயர். இந்த 8-ந் திருமொழி முழுவதிலும் இராமனைக் கடவுளாகக்கொண்டு இவர் பரவுதலைக் காணலாம். இப்படியே இவருடைய பாடல்களிலும், இதர ஆழ்வார்கள் பாடல்களிலும் இராமன் கடவுளாக இலகுதலை நாம் கண்டுகளிக்க முடியும்.

பின்னர்க் கம்பனுக்கு முன்வந்த ஆழ்வார்களே இராமனைக் கடவுளாக்கிவிட்டபிறகு இக்குற்றத்தை அவன்மீது ஏற்றுதல் எள்ளி நகையாடற் பாலதேயாகும்.

இனிக் கம்பன் தமிழன். அவனால் இராமனைத் தமிழகத்தில் மட்டுந்தான் கடவுளாக்கமுடியும். இந்தியத்துணைக்கண்டமுழுவதும் இராமன் கடவுளாகத்திகழ்கின்றானே. அதைக் கம்பன் செய்ததென்று கூறமுடியுமா? முடியாது. எனவே கம்பனுக்கு முந்தியே தமிழ்நாட்டில்மட்டுமல்ல; வடநாட்டிலும் இராமன் கடவுளாகிவிட்டான். கடவுளாகிவிட்ட இராமனைக் கடவுள் பக்தனாகிய கம்பன், அதிலும் ஆஸ்திக சிகாமணியாகிய கம்பன் மனிதனாக மாற்றுவானா? அவன் கடவுள் பக்தனாய், ஆஸ்திக சிகாமணியாயிருந்தது சரியா? தவறா? அதில் நுழையவேகூடாது. ஏனெனில் அதுவல்ல இங்குள்ள பிரச்சினை. ஆகவே இராமனைக் கம்பன் கடவுளாகவே பாடினான்.

கம்பனுடைய காலத்திலும் அதற்கு முன்னரும் இப்படிச் சரித்திரங்களில் வருபவர்களைக் கடவுளர்

களாக்கும் வழக்கம் நம் தமிழகத்தில் மிக்குப் பரவி யிருந்திருக்கிறது:

பாரதக்கதையில் வரும் கண்ணனும், கந்த புராணக்கதையில் வரும் முருகனும் மிக மிகப் பழைய காலந்தொட்டே கடவுளர்களாகத் தென் றமிழ் நாட்டின்கட் சிறப்பிக்கப்பெற்றுள்ளனர்.

தருமி என்பானுக்குச் சிவபெருமானே ஒரு தமிழ்க்கவி எழுதிக்கொடுத்து அதனைக் கொண்டு போய் மன்னவன்பாற் சேர்த்துப் பரிசுபெறக் கூறி னன் எனவும், அவ்வாறே தருமி செய்தானாக அரசனும் அச்செழுந் தமிழ்ப்பாட்டினை வியந்து பரிசினை அவற்கு வழங்கினானெனவும், நக்கீரன் என்னும் நற்றமிழ்ப் புலவன் அதை இடைநின்று மறித்து அப்பாடலில் குற்றமுளதென்று கூறினா னெனவும், அதன்மேற் சிவபெருமானே அங்கு வந்து அவன்பால் வாதிட்டானெனவும் கூறுகின்ற வரலாறு ஒன்று பெரிதுந் தமிழ்நாட்டின்கட் பரவி வழங்குகிறது. நூல்கள் அதனைப் பெரிதும் சிறப் பித்துக் கூறுகின்றன. உண்மை என்ன? நக்கீர னோடு வாதிட்டவன் பரமசிவனாக இருத்தல் இய லுமோ? இயலாதன்றே. ஆயின் வாதிட்டவன் கீரனையொத்த தமிழ்ப்புலவனேயாதல் திண்ணமே யல்லவா?

இப்படியே மதுரையை ஆண்ட சுந்தரபாண்டி யனைச் சிவனெனவும், தடாதகைப் பிராட்டியை

அவன் பங்கிலுறை சிவையெனவும் கூறும் வழக்கு பண்டுதொட்டே இருந்துவருகின்றது.

தலைச்சசங்கத்தில் சிவபெருமானும், முருகனு மமர்ந்து செந்தமிழாய்ந்ததாகக் கூறப்படுவது என்ன? இறையனாரகப்பொருள் கடவுளே இயற்றி ஞரெனக் கூறுதலை நாம் அறியமாட்டோமா?

இப்படியே கடவுட்கொள்கையில் மிகுதியான பற்றும், விஞ்ஞான வளர்ச்சிக் குறைவுமிருந்த அக்காலத்தில், எல்லாம் கடவுளின் செய்கையெனக் கொண்ட அந்நாளில் 'கடவுள்' கதைகள் சுலபமாகக் பரவுதல் வழக்காயிருந்திருக்கிறது.

சிவபெருமானுந் திருமாலும் எழுந்தருளி அடியவர்கட்கு இன்னருள் பாலிக்கும் செய்திகள் எங்குமல்லவா விரவிக்கிடக்கின்றன. அவற்றை மெய்ப்பிக்கவே இந்தக் கடவுள் அவதாரக் கதைகள் புறப்பட்டிருக்கின்றன.

பகவத்கீதையில் கண்ணன் "துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனார்த்தமாக நான்வந்து பிறப்பேன்" என்று கூறியிருக்கின்ருன் எனவும், அக்கடவுளே காந்தியாக அவதரித்திருக்கின்ருர் எனவுங் கூறப்படவில்லையா? விஞ்ஞானவளர்ச்சியும், உலகத்தொடர்பும் பிறவும் சிறிதளவு உரம் பெற்றுள்ளமையால் அது இன்று நிலைபெறவில்லை. இன்றேல், காந்திஜி மகாவிஷ்ணுவின் பத்தாவது அவதாரமாகிய கல்கி அவதாரமாகவே ஆகியிருப்பார்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 102693

அதோடு காந்திஜி கோயில்களைப்பற்றியுங் காற்று வாக்கில் குறைசொல்லிவிட்டார். அதில் பக்தர்கள் கசந்துபோயினர். இல்லையேல் காந்திஜி கடவுளின் அவதாரமாய்க் காட்சியளித்திருப்பார்.

இனி, இராமாயணத்தில் இராமனைக் கடவுளாக்குகின்ற சம்பவம் ஒன்றிருக்கின்றது. **அதுதான் அகலிகை சாப விமோசனம்.** அகலிகை என்னும் அணங்கு கற்பில் தவறியதால் அவள் கணவராகிய முனிவராற் கல்லாகச் சபிக்கப்பெற்ருள் எனவும், இராமன் திருவடிபடலும் கல்லுரு நீங்கி அவள் பெண்ணுருப் பெற்ருள் எனவும் கூறப்படுகிறது. **தாயுமான அடிகளும்,** "இராமனடியாற் **சிலையும் மடமங்கையாகவில்லையோ**" என்று இதனை வியந்து கூறுகின்ருர். இக்கதை வான்மீகியாற் செய்யப்பட்ட இராமாயணத்தில் வருகிறது. எனினும் அதில் அகலிகை கல்லாகச் சமைக்கப்பட்டதும், இராமனடிபடலும் மீண்டும் அவள் பெண்ணுருப் பெற்றதும் கூறப்படவில்லை.

கௌதமரால் அவள் அன்ன ஆகாரமின்றித் திருநீற்றிற்கிடந்து எவர் கண்ணிலும் படாதபடித் தனித்திருக்கும்படியாக ஏவப்பட்டாளெனவும், இராமன் சீதையை மணந்துகொண்டு இலக்குவனேடு அங்குவந்தபோது அவள் அவ்வாறு நோற்க வேண்டிய கால அளவு முடிந்ததால், அவள் எதிர்ப்பட்டாள் எனவும், அவள் காலடியில் இராமனும்,

சீதையும், இலக்குவனும் வீழ்ந்து வணங்கினர் எனவுமே கூறப்படுகிறது.

இதைத் தலைகீழாகப் புரட்டி "அகலிகையின் கல்லுருவினைமாற்றி இராமன் அவட்குப் பெண்ணுரு அளித்தான்" என்று வான்மீகிக்குப் பின்னும், கம்பனுக்கு முன்னும் வந்த காளிதாஸனை உள்ளிட்ட புலவர்கள் புதிது புகுத்தியுள்ளனர்.

இதனை இருமொழிவல்ல பெரும்புலவர் மறைமலையடிகளார் தம்முடைய "**மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்**" என்னும் நூலில் அரிதாராய்ந்து வெளியிட்டுள்ளார்,

"அகலிகை என்பாள் இந்திரனோடு மருவினமை பற்றிக் கௌதமரால் கல்லாக உருமாறிக் கிடக்கும்படி சினந்துரைக்கப்பட்டாள் என்றுதல், பின்னர் இராமனது அடித்துகள் பட்ட வளவானே தனது பழைய வுருவினைப் பெற்று நின்றுள் என்றுதல் ஏதும் வான்மீகி இராமாயணம் பகரவில்லை. அவள் இழைத்த அக்குற்றத்திற்காகக் கௌதமர் அவளை நோக்கி "இவ்வாசிரமத்துள்ளார் எவர் கண்ணிலும் படாமல் காற்றையன்றி வேறேது உணவும் எடாமல் திருநீற்றிற் கிடந்தபடியாய், நீ செய்த குற்றத்தை நினைந்து வருந்தித் தவம் புரியக் கடவை" என்று சினந்துரைத்தனரெனவும், அவ்வுரைப்படியே அவள் திரு நீற்றிற் கிடந்து தவமியற்றி, இராமன் தனது ஆசிரமத்துக்கு வந்த ஞான்று அத்தவம் முடிவு பெற்றமையின் வந்த அவனை வரவேற்க, அவன் தன் மனைவியோடும், தம்பியோடும் அவ்வகலிகையின் அடிகளில் வீழ்ந்து வணங்கினன் எனவும் வான்

மீதி இராமாயணம் புகலாநிற்கின்றது (பாலகாண்டம், 48, 49) ஆனால் பின்வந்த காளிதாஸரையுள்ளிட்ட புலவரோ அவள் கல்லாகச் சமைக்கப்பட்டுக்கிடந்து இராமன்றிருவடிபடுதலும் பழைய உருப்பெற்று எழுந்தாள் என உண்மையைப் பிழைப்பக் கூறினர்."

என்றெடுத்துக் காட்டியுள்ளார்.

இராமாயணத்திலே இராமனைக் கடவுளாக்குகின்ற நிகழ்ச்சி இது ஒன்றே என்பதை நாம் அறிவோம். மற்றெல்லாவிடங்களிலும் இராமன் மக்களில் உயர்ந்தவனாக, வீரனாகத், தீரனாக மதிக்கப்படும் ஆற்றல்களே புலப்படுகின்றன.

இவ்வொரு நிகழ்ச்சிதான் அவன் கடவுளாதலை நமக்கு எளிதில் எடுத்துக்காட்டுகிறது.

கடவுள் ஒருவனுக்குத்தான் கல்லை மனிதனாக்கும் பேராற்றல் உள தென்பதைப் புராணிகர்கள் பலபட விரித்துரைக்கின்றனர்.

எனவே இராமனைக் கடவுளாக்கிய புலவர்களே அதற்கியைய இந்நிகழ்ச்சியையும் மாற்றியிருக்கின்றனர். இங்கே மறைமலையடிகளார் காளிதாஸனையும், பிற புலவரையும் குறை கூறுகின்றன ரன்றிக் கம்பனைக் குறை கூறவில்லை என்பது கருதற்பாலது.

இங்கேமட்டுமல்ல; இராமாயணத்தைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புகளில் எங்கும் அவர்கள் கம்பன்மீது எவ்விதக் குற்றச்சாட்டையும் கூறவில்லை. உயர்ந்த புலமையும், உண்மையறிவும், தூயஉள்ளமும் படைத்த எவரும் இந்தச்

சரித்திரப் புரட்டுகளைக் கம்பன்மீது ஏற்றிக் கூற ஒருப்படார். ஏன்? உண்மையில் அவன் எதையும் திரித்துப் புரட்டவில்லை. அதேசமயத்தில் அப்பெரும்புலவன் தான் வாழ்ந்த காலத்தில் வழங்கிய இராமாயணக் கதையை மாற்றியமைக்கவும் மனங்கொள்ளவில்லை.

ஆதலால், இராமனைக் கடவுளாக்கியதுங் கம்பனல்ல; அவனைக் கடவுளாக்கும் நிகழ்ச்சிகளைப் பழைய நிகழ்ச்சிகளுக்குப் புறம்பாகத் திருத்திப் புரட்டிச் சித்தரித்தவனுங் கம்பனல்ல.

கம்பனுடைய காலத்திற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தியே இராமன் தமிழ்நாட்டுப் புலவர்களும் விதந்தெடுத்தோதுகின்ற முறையில் கடவுளாகிவிட்டான் என்பதை இனியும் நாம் ஆராய்ந்தறியவேண்டிய அவசியமில்லை.

இப்படியே வான்மீகிக்குக் கம்பன் மாறுபட்டிருக்கின்றான் என்று கட்டுரைக்கும் புலவர்கள் கற்பனையிற் கூறுவன அனைத்தும் சரித்திரத்தைப் பாராமால் மொட்டையாக வான்மீகி இராமாயணத்தையும், கம்பராமாயணத்தையும் மட்டும் பார்த்துக் கூறும் போலியுரைகளேயாதல் திண்ணமாம்.

உண்மையில் வான்மீகிக்குப் பின்னேவந்த புலவர்கள் பல்லோரும் தத்தமக்கேற்றவாறு இராமாயணத்தைத் திருத்தியும் மாற்றியும், புதிது புகுத்தியும் பெருக்கிவந்துள்ளனர் என்றும், அங்கிலையில்

வழங்கிவந்த கதையையே கம்பன் தன்னுடைய அருந்தமிழ்ப் புலமை கொண்டு ஈடு இணையற்ற **இயற்றமிழ்க் காப்பியக்** கோயிலாக எழுப்பினான் என்றும் கோடலே நமக்கு ஏற்றந்தருவதாகும்.

வான்மீகியின் காலத்திலிருந்து கம்பனுடைய காலம் வரையிலும் **எட்டுச்சுவடிகளே** ஆட்சியில் இருந்து வந்துள்ளன. இவற்றின் இயல்பை நாம் சிறிது அறிந்தால், நிலைமையைச் சிறிது விஞ்ஞானக் கண் கொண்டு பார்த்தால் இம்மாற்றங்கள் நிகழ்வதைத் தடுத்திருக்க முடியாதென்பதையும் நாம் புரிந்துகொள்ள முடியும்.

அச்சுவழக்கிலிருக்கும் இந்நாளிலேயே ஒரு பதிப்புக்கும் இன்னொரு பதிப்புக்கும் தினையளவல்ல; மலையளவு வேறுபாடு காணக் கிடக்கின்றபோது ஓலைவழக்கில் நூல்கள் வழங்கி வந்தபோது வேறுபாடுகள் இருப்பதில் வியப்பென்ன ?

உயர்திருவாளர் **சோ. முருகப்பா** அவர்கள் '**கம்பர் காவியம்**' என்னும் அருந்தமிழ் நூலொன்றில் கம்பனுடைய காவியம் எப்படிச் சிதைவுற்றுச் சீரழிந்திருக்கின்றதென்பதை அரிதாராய்ந்து மிகவும் பொருத்தமாகப் பல உண்மைகளை எடுத்தோதியிருக்கின்றார்கள். அதன்கண் கீழ்வரும் பகுதி காணக் கிடக்கின்றது:

"இதன்படி 260 விதமாகப் படலங்கள் ஒவ்வொரு பிரதியிலும் வெவ்வேறு வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. எப்படியும் அச்சிடப்பட்ட பிரதிகளில் பதிப்

பாசிரியர்கள் தங்கட்குச் சரியென்று தோன்றியபடி படலங்களை அமைத்துக் கொண்டிருக்கின்றனர். எந்தப் பிரதியிலும் 113-க்கு உட்பட்டே படலங்கள் உள்ளன. பாடலின் தொகையும் பிரதிக்கொரு விதமாகக் கூடவும் குறையவும் அடக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக வை. மு. கோ. பதிப்பில் மராமரப் படலத்தில் 145 பாடல்கள் உள்ளன. நமச்சிவாய முதலியார் பதிப்பில் காணப்படும், அனுமப் படலம், நட்புக்கோட்படலம் இரண்டும் வை. மு. கோ. பதிப்பில் கிடையா. இப் படியே பல மாறுபாடுகள் காணப்படுகின்றன. ஒரு படலம் 9 பாடல்களில் முடிகிறது. ஒரு படலம் 358 பாடல்களைக் கொண்டிருக்கிறது. படலப்பெயர் களும், வகுப்பு முறைகளும் கண்டபடியாகச் சிதைவு பட்டிருக்கின்றன. இவைகளைப் பார்க்கும் போது நூலே தாறுமாருகச் சிதைந்து கிடந்து சேகரிக்கப்பட்டி ருக்கின்றதென்பது தோன்றும்.

கம்பராமாயணத்திற்கே இப்படிப்பட்ட நிலைமை நேர்ந்திருக்கின்றதென்ருல், அதுவும் அச்சு வழக்கு ஏற்பட்ட பின்னர் நேர்ந்திருக்கிறதென்ருல், வான் மீகி இராமாயணத்தில் இப்படிப்பட்ட மாற்றங்கள் ஏற்படுவதில் வியப்பென்ன? ஆதலால் மொட்டை யாக இலக்கியங்களைமட்டும் பார்க்காமல் சரித்திரத் தையும் உடன்கூட்டிப் பார்த்து உண்மை தெளிய வேண்டும்.

இனி, 'வான்மீகி இராமனை அயோக்கியனுகவும், குடிகாரனுகவும் கூறியிருக்கின்றபொழுது. கம் பன் அவனை உயர்ந்தவனுகவும், உத்தமனுகவும்

குறிப்பிடுகின்றான்' என்று கூறுகின்றார்கள், உண்மை. ஆனால், கம்பன் இராமனை அவ்வாறு சிறந்தவனாகக் கூறுவதற்கு அவர்கள் ஒரு விசித்திர மான காரணத்தைக் கண்டு பிடித்திருக்கின்றனர்.

அதைத்தான் நம்மால் ஏற்றுக் கொள்ள முடிய வில்லை. அவர்கள் கண்டு பிடித்திருக்கும் அந்தக் காரணமென்ன தெரியுமா? " ஆரியரை உயர்த்த வும், தமிழரைத் தாழ்த்தவுமே கம்பன் அவ்வாறு கூறியிருக்கிறானாம் " எப்படி வேடிக்கை! இதோ டும் அவர்கள் நின்று விடவில்லை. கம்பனுடைய அந்தக் கூற்றினால் ஆரியர்கள் உயர்ந்தே விட்டார் களாம்; தமிழர்கள் தாழ்ந்தே விட்டார்களாம். அப் படியும் அவர்கள் அடித்துப் பேசி வருகின்றனர்.

அதற்கு நாம்ஒன்றும் பதில்கூறவேண்டியதில்லை. சரித்திரம் அதற்குச் சரியான பதிலைக் கூறும். அது மாத்திரமல்ல; ஒரு சமுகத்தின் உயர்வும், தாழ்வும் ஒரு புலவனின் எழுத்தில்தான் ஊசலாடுகின்றன என்னும் இந்தப் பரிகசிக்கத் தகுந்த வாதத்திற்குப் பதில் கூற வேண்டிய அவசியமேயில்லை.

தமிழ் நாட்டில் கம்பராமாயணம் ஒன்றுதானிருக் கிறதா? பல்லாயிரக் கணக்கான நூல்களிருக்கின் றன. திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிறது. சங்க இலக்கியங்களும் பிறவும் இருந்து வருகின்றன. ஆனால் அவை தமிழரைத் தாழ்த்தவுமில்லை; உயர்த்தவுமில்லை. அல்லது கம்ப

ராமாயணம் தமிழரைத் தாழ்த்திய போதாவது அத்தீய முயற்சியைத் தடுத்து நிறுத்தவுமில்லை. ஏன் ? அந்நூல்களெல்லாம் நூல்களல்லவா ? இப்படி நாம் ஒரு ஆராய்ச்சி செய்வதே நகைப்பிற்கிடமாகத் தோன்றவில்லை ? ஆதலால் கம்பனல்ல ! வேறெந்தப் புலவனுனாலும் சரி ; எதை வேண்டுமானுலும் எழுதலாம்; எழுதாமற் போகலாம். அதனுல் சமூகம் முன்னுக்கோ அல்லது பின்னுக்கோ தள்ளப்பட்டு விடாது. அதற்கு முற்றிலும் மாருக இலக்கியத்தையும் அதை இயற்றிய புலவனேயும் முன்னுக்கு அல்லது பின்னுக்குத் தள்ளுவது சமூகம்.

எனவே இது ஒரு அசட்டுவாதம். அது மாத்திரமல்ல; எதனுல் சமூக முன்னேற்றம் நடைபெறுகிறதோ அதை மூடி மறைத்து மக்களைத் தப்புவழியில் அழைத்துச் செல்லும் தவருன முயற்சி.

இன்றைய சமூக இயல்பினுல் ஏற்படும் ஏழ்மையையும். வறுமையையும், திருட்டு, கொலை, பொய். சூது, ஏமாற்றம், விபசாரம் எல்லாவற்றையும் சினிமாவின் மீதும் இன்னென்றின் மீதும் போட்டுக் கொண்டு இந்தச் சமுகச்சேற்றில் மக்களை இன்னும் அழுத்திக் கொண்டிருப்பதற்கு என்றும் எப்பொழுதும் எதையாவது பேசித் திரிகின்ற எத்தர்களின் கோஷம்.

இந்தப் பாழுஞ் சமூகத்தைத் தூக்கி எறிந்து விட்டுப் புத்தம்] புதிய சோஷலிஸ சமூகத்தை

உருவாக்கும் பணியில் மக்கள் ஒன்று படுவதற்கு அமைந்துள்ள நல்லியக்கத்தில் மக்கள் கூடுவதைத் தடுத்து நிறுத்தும் சண்டாளப்பாதை.

எனவே இதை விடுத்துக் ' கம்பன் ஆரிய இன உயர்விற்காகவும், தமிழர் தாழ்வுக்காகவுந்தான் இராமனை உயர்ந்தவனுகக் கூறியிருக்கின்ருன் ' என்பதைப் பார்ப்போம்.

கம்பன் மீது இக்குற்றச்சாட்டைப் புனைந்து கூறுகிறவர்கள் தங்களைப் பகுத்தறிவுப் பாசறை வீரர்கள் என்று கூறிக் கொள்கின்றனர். அதில் நமக்கு ஆட்சேபம் இல்லை. ஆனுல் அந்தப் பகுத்தறிவுப் பாசறையிலிருந்து அசலான பகுத்தறிவைப் பெற்றுள்ள நம் அருமைத் தோழர்களுக்கு இதிலுள்ள இன்னெரு விஷயம் மட்டும் ஏன் புரியவில்லை என்பது தான் நமக்கு வியப்பாயிருக்கிறது.

ஆரிய இராமனைக் கம்பன் உயர்த்துவது ஆரிய இன உயர்வுக்கும், தமிழினத் தாழ்வுக்குந் தானே. நிரம்ப சரி. அப்படியானுல் வான்மீகி அந்த இராமனைக் குறைத்துக் கூறியிருப்பது ஆரியரைத் தாழ்த்தவும், தமிழரை உயர்த்தவுந் தானு ? பகுத்தறிவுப் பாசறையின் பக்கலில் நிற்கின்றவர்களே! பதில் கூறுங்கள்! என்று நாம் அவர்களைக் கேட்கலாம் தவருென்றுமில்லை.

இப்படி ஒரு கேள்வி பிறக்குமென்று பாவம் அவர்கள் எதிர்பார்க்கவில்லை, எதிர் பார்த்திருக்

தால் இக்குற்றச்சாட்டைக் கூறியிருக்கவே மாட்டார்கள்.

ஆரிய மொழிப் புலவனுக்குத் தமிழர்கள் பேரில் அபார அன்பு, தமிழ் மொழிப் புலவனாகிய கம்பனுக்கு ஆரியர்மாட்டு அன்பு. ஆனால் இருவருக்கும் சொந்த நாட்டு மக்களிடத்துத் துளிக்கூட அன்பில்லை என்பது மட்டுமில்லை. அவர்களை மட்டம் தட்டும் துரோக எண்ணமும் இருந்திருக்கிறது. இது வாதமல்ல, வக்கிரம், அவ்வளவுதான் சொல்ல முடியும். 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்னும் பழமொழிக்கு அசலான உதாரணம். இனவெறியைக் கிளப்ப வேண்டும். அதற்காக எதை வேண்டுமானாலும் இட்டுக்கட்டிக் கூறவேண்டும். பலித்த வரையில் பலிக்கட்டும் என்னும் பண்பற்ற அடிப்படையிலிருந்து எழுந்த பிற்போக்கு வாதம்.

பின்னர் அவ்விருபுலவர்களும் வேறுபடுவதற்குத் தான் காரணமென்ன ? தமிழகத்தில் மட்டுமல்ல; உலக முழுவதிலுமே தோன்றிய புலவர்கள் எந்தக் காரணத்தால் தங்களுக்கு முன் தோன்றிய புலவர்கள் கருத்துக்கு மாறுபடுகின்றார்களோ, அதே காரணத்தினால் தான் கம்பனும் வான்மீகிக்கு மாறுபடுகின்றான்.

**ஒரு புலவன் தோன்றி மறைந்து இன்னொரு புலவன் தோன்றுகிற வரையில் சமூகம் தூங்கிக்**

கொண்டிருப்பதில்லை; புலவர்களுக்காகக் காத்துக் கொண் டிருப்பதுமில்லை. அது தன்வழித் தன் இயல்பில் வளர்ந்து முன்னேறி விடுகிறது. அந்த முன்னேற்றத்தின் வெளிச்சத்தில் புதிய புலவன் பழைய புலவனுடைய படைப்பிலுள்ள மாசு மருவுகளை யெல்லாம் பார்க்கின்றான். பார்க்கின்ற அவன் அவற்றைக் களைந்து தனக்குச் சரி என்று தோன்றுகிற முறையில் தன் அரிய படைப்பினைச் செய்கின்றான். இது புல வர்கட்கு மட்டும் பொருந் துவதல்ல. உலகியல் முழுவதுக்குமே உரிய சித்தாந் தம். பனை ஓலையில் செய்த காதணிகளைப் பொன்னா லும் மணியாலும் சமைக்கின்ற பொற்கொல்லனை யணுகி 'நீ ஏன் இதனை முன்னர்ச் செய்த உன் மூதாதையர் செயலைப் பழிக்கின்ற முறையில் அவர் கள் ஆண்ட அந்தப் பனை ஓலையைக் கைவிட்டுப் புதிய பொன்னையும், மணியையும் கொண்டு இவ் அணியைச் சமைக்கின்றனை ? என்று வினவினால் அவன் என்ன பதில் கூறுவான் ? அப்படியே பழ மையைக் கைவிட்டுப் புதுமையைக் கடைப்பிடிக் கிறவர்கள் எத்துறையினராயினும் அவர் தம்மை அணுகி நாம் அதற்குக் காரணத்தைக் கேட்டால் அவர்கள் என்ன கூறுவர் ? 'அது இக்காலத்திற்குப் பொருந்தவில்லை' என்று ஒரே பதிலைத் தான் கூறு வர் அல்லவா ? அதே போலத்தான் வான்மீகி கூறி யவை கம்பனுடைய காலத்துக்குப் பொருந்தவில்லை.

மாற்றினன். இதில் ஆரியர் உயர்வுமில்லை; தமிழர் தாழ்வுமில்லை.

வான்மீகி இராமனை உயர்ந்தவனாகத்தான் கூறுகின்றான்; தாழ்ந்தவனாக ஒன்றுங் கூறிவிடவில்லை என்பதையும் நாம் இங்குக் கவனிக்க வேண்டும். ஆனால் இராமன் உயர்வினைக் கெடுப்பவை இச்சிறுமைகள் என்பதை அப்புலவன் அறியவில்லை. அவ்வளவுதான். வான்மீகியின் காலவளர்ச்சி மது மாமிசங்கள் அருந்துதலைத் தவறாகக் கொள்ளவில்லை. அவ்வளவு ஏன்?

இன்றும் மற்றைய நாடுகளில் உலகமெல்லாம் உச்சிமேல் வைத்து மெச்சத் தக்கவர்களாக விளங்குகிறவர்களுங் கூட மது மாமிசங்கள் அருந்துதலைக் குறைவாகக் கருதுவதில்லை. அங்கு மனிதனை மது மாமிசங்கள் கௌரவிக்கும் பொருள்களாக விளங்குகின்றன.

இங்கும் உயர்தர நீதி மன்றத்தி லமர்ந்திருந்த இந்தியரல்லாதாரனைவரும், இந்தியரில் ஐரோப்பிய நாகரிகத்தை ஏற்றுக் கொண்டவர்களும் மதுவையும், மாமிசத்தையும் விலக்கி விடவில்லை. மது மாமிசமருந்துகிறவர்களாயிற்றேஎன்று நாமும் அவர்களை விலக்கிவிடவில்லை.

மது மாமிசங்களைப் புசித்தல் தவறு என்பது இன்றுங் கூட உலக முழுவதும் ஏகமனதாக ஒப்புக் கொள்ளப் படுகிற விஷயமுமல்ல. இராமன் குடி

காரன்; அவன் மச்ச மாமிசங்களைப் புசித்தவன்; ஆதலால் அவன் அயோக்கியன்; அவனைப் போய்க் கடவுளாகக் கொண்டாடுகிறீர்களே' என்று மக்களுக்கு உபதேசம் பண்ணுகின்ற நம்மருமைத் தோழர்கள் மது மாமிசங்களை அருவருத்து ஒதுக்குகின்றவர்களா? இல்லையே. அவர்கள் வருவதற்குமுன்னே அவர்கள் வந்தால் சமைக்க வேண்டியது எந்த வகைப் புலவு? மீனானால் அது எத்தனை அங்குல நீள அகல மிருக்கவேண்டும்? என்பனவற்றை விவரமாகத் தாங்கியுள்ள கடிதங்கள் நம்மை அடுத்து நமக்கு முன்னறிவிப்பு செய்கின்றனவே.

ஆதலால், வான்மீகி இராமனைக் குறைவுடையவனாகக் கூறுகின்றான் என்று கூறுதலே சரியல்ல; அதற்கு மேல் கம்பன் அதைமாற்றி இராமனை உயர்ந்தவனாக்கி விட்டான் என்று கூறுதல் மட்டும் எவ்வாறு பொருந்துவதாகும்?

பாரதத்தில் மிகச் சிறந்த மேலானவனாகக் குறிக்கப் படுகின்ற தருமன் சூதாடுகின்றான்; சூதாட்டத்தில் தேசத்தைப் பணயமாக வைத்துத் தோற்கின்றான். இவ்விரு செயல்களும் குறைவுடையவை என்றுபாரதம் பாடிய எவரும் சொல்லவில்லை. காரணம் அவர்களுடைய காலகட்டத்தில் அரசர்கள் சூதாடுவது துதவறாகக்கருதப்படவில்லை. அதோடு தேசம் அரசனுக்குச் சொந்தம் என்னும் போதமிருக்கிறது. எனவே மிகச் சிறந்த மேலானவனாகக்

குறிக்கின்றேமே தருமனை. அவன் சூதாடினன்; தேசத்தைப் பந்தயமாக வைத்துத் தோற்றான் என்று கூறினால் அவை அவனைக் குறைவுபடுத்துமே என்று அவர்கள் கருதவில்லை. அவ்வளவுதானே ஒழிய அவர்கள் தருமனைக் குறைத்துக் கூறவே அவற்றைக் கூறினர் என்று வாதித்தல் உண்மைக்கு ஒத்ததல்ல. பின்னே நம்முடைய காலத்தில் வந்த மகாகவி பாரதியும் தருமனைத் தாழ்ந்தவனாகக் குறிப்பிட்டுவிடவில்லை. பொதுவாக அவனைச் சிறப்பித்துக் கூறினாலும், சூதாட்டத்தையும், அதில் அவன் தேசத்தை வைத்து இழத்தலையும் ஆவேசமாகத் தாக்கி அத்தருமன் தறைவுபடப் பேசுகிறார். கோயிற்பூசை செய்யும் பூசாரி சிலையைக் கொண்டு விற்கும் கோமாளிக் கூத்திற்கு உவமை கூறுகிறார். 'ஆயிரங்களான நீதி அவையறிந்த தருமன் தேயம் வைத்திழந்தான் சீச்சீ! சிறியர் செய்கை செய்தான்' என்று அனலைக் கக்குகின்றார் பாரதி.

இவ்விரு மாறுபாடுகளுக்குங் காரணம் முந்திய பிந்திய காலகட்டங்களில் நிலவிய அரசியல் வளர்ச்சியும் போதமுமே யாகும். ஆகவே, வான்மீகி இராமனைக் குறைத்துக் கூறவுமில்லை; கம்பன் அவனை உயர்த்திக் கூறவுமில்லை; இருபுலவர்களும் தாங்கள் வாழ்ந்த கால கட்டங்களில் நிலவுகின்ற சமூக நீதிக்கு ஏற்ப இராமாயணத்தின் பிர தான பாத்திரமாகிய இராமனைக் கூறிச் செல்லு

கின்றனர் என்று கோடலே பொருத்தமானதாகும்.

இனிக் ' கம்பன் தன்னுடைய காவியத்தைக் காம ரசம் பெருக்கெடுத் தோடச் செய்திருக்கின்ருன் ' என்று விமர்சனக்காரர்கள் கூறுகின்றனர். அதை விளக்கிக் ' **கம்பரசம்** ' என்றே ஒரு நூலும் எழுதப் பட்டிருக்கின்றது. விமர்சனக்காரர்கள், தமிழ்ப் புலவர்கள் மீது இக்குற்றத்தைச் சுமத்தியிருந்தாலும் பரவாயில்லை. அங்ஙன மில்லாது கம்பன் மீது மட்டும் இக்குற்றத்தைச் சுமத்தியிருப்பது அவர்களின் — அவர்களைப் பின்பற்றுகிறவர்களின் தமிழ் நூற் புலமைக் குறைவையே காட்டி நிற்கின்றது. தமிழ் நாட்டில் வந்த எந்தப் புலவன் இந்த முறையில் பெண்களின் மறைவிடங்களைக் கூருது போனவன் என்று கேட்கின்ருேம் ? புலவர்களிருக்கட்டும்; பக்தர்கள்; பரமாசாரியர்கள் என்று தமிழ் மக்களால் போற்றப்படும் எவர்தாம் இதற்கு விலக்காக நிற்கின்ருர் ? ஒருவருமில்லையே தமிழ் நாட்டில் வந்த புலவர்களும். சமயாசிரியர்களும் பிறரும் பெண்கள் மறைவிடங்களைப்பற்றிப் பேசுதலைக் குறைவாகக் கருதவில்லை. உச்சி மேல் வைத்து நாம் மெச்சுகின்ற உயர்தமிழ்ப் புலவர் வள்ளுவருங் கூடப் பெண்கள் முலைகளைக் கூறியிருக்கின்ருர்.

நமக்கு இது தவருகப்படலாம். அருவருப்பாகத் தோன்றலாம். ஆனல் அன்று நாடு முழுவ

தும் இதை அங்கீகரித்திருக்கிறதே. அதனால் அன்றைய வளர்ச்சியில் இது தவருகப்பட வில்லை என்று தானே நாம் கொள்ள வேண்டும்.

இன்றுங்கூட ஒரு பிரிவினருக்கு அருவருப் பாகத் தோன்றுகின்ற ஒன்று மற்றொரு பிரிவின ருக்குச் சர்வ சாதாரணமாகத் தோன்றுகின்றது. இங்கே நம்மில் ஆண்கள் "இவன் என் முதல் தாரத்தின் மகன்; இதோ நிற்கின்ருனே இவன் என் இரண்டாந்தாரத்தின் மகன்" என்று கூறு வதைத்தான் நாம் கேட்க முடியும். பெண்கள் "இவன் என் முதல்புருஷனின் மகன்; இவன் என் இரண்டாவது புருஷனின்மகன்" என்று கூறு வதைக் கேட்க முடியாது. அப்படி ஒரு பெண் கூறுவது எவ்வளவோ அருவருப்பை நமக்கு அளிக்கும் என்று அதை மனத்தினுலும் நினைப்பதற்கு நாம் அஞ்சுகிருேம்.

ஆனால் தெற்கே ஒரு வகுப்பினர் இருக்கின் றனர். அவர்களில் பெண்கள் கொஞ்சமும் அச்சமின்றிப் பகிரங்கமாக "இவன் என் முந்திய புருஷனின் மகன். இதோ இருக்கின்ருனே இவன் இப்பொழுது இருக்கின்ற இரண்டாவது புருஷனின் மகன்" என்று கூறுகின்றனர். அவர் கள் இப்படிக் கூறுவதற்கு வெட்கப்படுவதே இல்லை. ஏன்? அவர்கள் சமூகம் முழுவதுமே அது பரவியிருக்கிறது.

விதவையான ஒரு பெண் மற்றொருபுருஷனை மணந்து கொள்ளுதல் நமக்கு அருவருப்பாகத் தோன்றுகிறது. குடி முழுகிப்போய் விடும் என்று எண்ணுகிறோம். நம்மிலேயே — தமிழர்களிலேயே எத்தனைப் பிரிவினர் வேண்டும்? ஏழு முறைகளில் திரும்பத் திரும்ப மணம் செய்து கொண்டு வாழ்கின்றவர்கள்.

எதற்காக இத்தனையுங் கூறுகின்றோம். அந்தந்த சமூகங்கள் அதனதன் சுற்றுச் சார்புகட்கும், சூழ்நிலைகளுக்கும் ஏற்றவாறு எண்ணங்கள், நடைமுறைகள், பேச்சுவார்த்தைகள் முதலியவற்றை மேற்கொண்டிருக்கின்றன. அவற்றை நாம் குறை கூறுவது சரியல்ல என்பதற்காகவே.

பார்ப்பனர் சகோதரிகளையும், தாயையுங் கூட 'வாடி, போடி' என்று பேசுகின்றனர். அதைக் கேட்கின்ற போதே நமக்கு உயிர் போய்விடும் போலத் தோன்றுகின்றது

இப்படி எவ்வளவோ கூற முடியும். ஆங்கிலேயர்களும், ஆங்கிலோ இந்தியர்களும் ஆண் பெண் வேறுபாடின்றி ஒன்றி நின்று நடனமாடுவதைக் காண்கின்றோம். அங்கு யார்வேண்டுமானாலும் யாரை வேண்டுமானாலும் இறுகச் சேர்த்தணைத்துக் கொண்டு ஆடலாம்; பாடலாம் அவர்கட்கு அது குறைவாகப் படுவதேயில்லை. நமக்கோ அதைப் பார்க்கவே பிடிப்பதில்லை.

எனவே, கம்பன் மட்டும் இவ்வாறு கூறியிருந்தாலும் காமரசம் கம்பரசம் என்று நாம் வம்பளப்பது சரியாகலாம். இல்லையே. இந்த நாட்டில் வந்த புலவர்களேயன்றிச் சமயாசிரியர்கள் என்போரும், முற்றத் துறந்த முனிவர்களும், பக்திமான்களும் அத்தனைப் பேரும் இந்தப் பாணியில் தங்கள் படைப்புகளைப் படைத்திருக்கின்ற பொழுது கம்பன் மீது மட்டும் இக்குற்றம் எவ்வாறு பொருந்தும்?

இதற்கு மேல் பெண்கள் மறைவிடங்களைக் குறிப்பது, வெளிப்படையாகக் கூறுவது தவறு என்று விமர்சனக்காரர்கள் கூறினாலும் பரவாயில்லை.

"கம்பன் ஒரு காம வெறிபிடித்தவன்; அதனாலேயே இவ்வாறு கூறுகின்றான்" என்றும் கூறுகின்றனர். இதைவிடப் படுமோசமான அவதூறு இருக்க முடியாது. இது கம்பனைக் குறை கூறுவதல்ல. தமிழனைக் குறை கூறுவது; தமிழ் மொழியையே அவதூறு படுத்துவது என்று தாழ்மையாகக் கூறிக் கொள்கிறோம்.

தமிழகப் புலவர்கள், சமய குரவர்கள் அத்தனைப்பேரும் காமப்பித்தர்கள், கயவர்களென்று கூறுங்கள், அது உங்கள் கருத்தாகலாம். அதை விடுத்துக் கம்பன்மீது மட்டும் இதைச் சுமத்துதல் தமிழ் மக்களுக்கு ஒரு தவறான சித்திரத்தை வரைந்து காட்டி

அவர்களைக் குருடர்களாக்குவது என்று தான் நாம் கூறவேண்டியிருக்கிறது.

கம்பனிருக்கட்டும். காவியப் புலவர்கள், பக்தர்களிருக்கட்டும். புராதன காலந் தொட்டு இந்நாட்டின் சிற்பக் கலைச் செல்வத்தைக் கல்லிலும், பிற உலோகங்களிலும், சித்திரங்களிலும் தீட்டித்தந்த சிற்பிகள், சித்திரக்காரர்கள் அத்தனைப் பேர்களும் காமப்பித்தர்கள், கயவர்கள்தாமா? என்று கேட்க ஆசைப்படுகின்றோம். புலவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். அதன் மூலம் அவற்றின் பெயர்கள் தாம் நமக்குத் தெரியும். ஆனால் இந்தச் சித்திரக்காரர்கள் ஆண்களும் பெண்களும் ஒருங்கு உலவுகின்ற விடங்களில் எல்லோரும் பார்க்கும்படியாக அந்த உருவங்களையேயல்லவா சித்திரித்துக் காட்டுகின்றனர். அவர்கள் காமரச மிகுதியினால்தான், மக்களுக்குக் காமரசத்தை யூட்ட வேண்டு மென்றுதான் அவ்வாறு செய்தனர் என்று நாம் கூறினால் நம்மை அறிவுலகம் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் வைத்துத்தான் பாதுகாக்கச் செய்யும். அது மட்டுமா? அந்தக் கலைச் செல்வங்களைப் பார்க்கின்ற போது நமக்குச் காமரசமல்ல பெருகுகின்றது. நம் கலைச் செல்வங்களை அளித்த செல்வர்களின், அவர்களைப் பயந்த நம் தாய் நாட்டின் அருமை பெருமைகள் தாம் நம்மிடைத் தோன்றுகின்றன.

இப்படியெல்லாமிருக்கும் பொழுது இராமாயணம் நமக்குப் பிடிக்கவில்லை. இராமாயணத்தினால் தான் நம் தமிழக மக்கள் தாழ்ந்து விட்டார்கள் என்று ஒரு தப்பெண்ணம் நமக்குள் புகுந்து விட்டது. ஆகவே அதனைப் பாடிய கம்பனைத் தூற்றுவதில், அவன்மீது அவதூறுகளைப் பொழிவதில் வெறி பிடித்தவர்களாகவே ஆகிவிட்டோம். சிந்தனையே குழம்பி நிற்கின்றோம். அவ்வளவு தான்.

இது நம்மை நாமே இழிவு படுத்திக் கொள்ளும் இழிதகைமை,

இனிக் கம்பனுடைய காவியத்திலிருந்து காமரசப் புலவர்கள் பொறுக்கியெடுத்திருக்கிற பாடல்கல் பத்துக்குங் குறைவாகவேயிருக்கின்றன. அப்பெரும் புலவன் பாடிய பாடல்களோ பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவை. ஒருகால் காமரசப் புலவர்கள் நாங்கள் குறிப்பிடுகிற விடங்கள்தாம் பத்துக்குங் குறைவு; பாடல்கள் அதிகமென்று கூறினும் கூறுவர். அப்படிப் பார்த்தாலும் நூறு பாடல்களுக்கு மேல் தேறமாட்டா. அவ்வளவுதானே. ஏன் இந்தப் பாடல்களை இவர்களின் முன் தோன்றல்கள் கம்பனுடைய காவியத்தில் புகுத்தியிருக்கக்கூடாது? புகுத்துவது சாத்தியமில்லையா? வாதத்திற்காகத் தான் கேட்கிறோம். நாம் இடைச் செருகலென்று கூறவில்லை. இந்தப் புலவர்கள் இன்னுமுள்ள நூல்களில் தங்களுக்குச் சாதகமாயில்லாத பாடல்களைக்

கொஞ்சமும் அஞ்சாமல் 'இவை இடைச் செரு கல்' என்று கூறுகிறார்களே. அப்படிப் பட்ட இந்த அருந்தமிழ்ப் புலவர்கட்கு இப்பாடல்கள் மட்டும் கம்பனே ஏடும் எழுத்தாணியுங் கொண்டு நேரே எழுதிவைத்தது என்பது ஒருவேளை தெரியுமோ? திருக்குறள் பாயிரத்தில் பத்துப் பாடல்கள் கடவுள் வாழ்த்தாகவுள்ளன. அவை இந்தப் பகுத்தறிவுப் பாசறை வீரர்களுக்குக் கொஞ்ச நாளைக்கு முன்னே (இப்பொழுதுதான் ஒரு கடவுள் வாதத்தில் இறங்கியிருக்கிறார்களே; கடவுளுமில்லை; மதமுமில்லை' என்று சொல்லிக் கொண்டிருந்தார்களே அப்பொழுது) பிடிக்கவில்லை. அதற்காக இவர்கள் சொன்னதென்ன தெரியுமா? "இந்தக் கடவுள் வாழ்த்து திருவள்ளுவர் பாடியதல்ல" என்பதுதான். அது எடுபடாது என்று தெரிந்ததே அதை அப்படியே விட்டு விட்டுத் தங்கள் இனப்பகைமை வெறியையூட்ட வழி ஏதாவது அதிலிருக்கிறதா? என்று தேடிப் பார்த்தார்கள். திருக்குறளுக்கு உரை எழுதியுள்ள பரிமேழலகர் பார்ப்பனர் என்பது தெரியவந்தது. அவ்வளவுதான். சரியான வேட்டை. "அவன் பார்ப்பான்; ஆகவே தமிழர்களுடைய திருக்குறளைத் திரித்துப் புரட்டிப் பார்ப்பனீயத்தை அதில் புகுத்தியிருக்கின்றான்" என்று கயிறு திரித்துக்கொண்டு திருக்குறளுக்குப் பல தலையணை உரைகளைத் தைத்துப் போட்டுத் தமிழ் மக்

2/3 14-9-72

களைக் குழப்பத்திலாழ்த்தி வருகின்றனர். இவர்கள் எழுதியுள்ள உரையைப்பற்றி ஒன்று மட்டும் கேட்க ஆசைப் படுகிறோம். திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே பிறந்தவர் ; அவர் இன்றைய முற்போக்குக் கருத்தைப் பிரதிபலிப்பதாகக் கூறுகிறீர்களே. உங்களுக்குச் சரித்திரக் கண்ணோட்டமோ, விஞ்ஞான வளர்ச்சியில் ஏற்படும் மாறுதல்களோ, அவற்றால் நிர்ணயிக்கப்படும் எண்ணங்கள், நியாயங்கள், சமூகநீதிகளோ ஏதாவது தெரியுமா ? எதைப்பற்றியாவது சிந்தித்துப் பார்த்தீர்களா ? உங்களுக்கு ஏதாவது உலகைப் பற்றிய நிர்ணயிப்பு உண்டா ? " பகுத்தறிவு, பகுத்தறிவு " என்று அடித்துக் கொண்டு நாட்டை அலக்கழிக்கின்ற பகுத்தறிவு வாதிகளே ! இந்தப் பகுத்தறிவு காட்டுமிராண்டிப் பருவத்திலிருந்து இன்றுள்ள நாகரிக நிலைவரை மனிதசாதி அடைந்து வந்த மாற்றங்களுக் கேற்பத்தான் வளர்ந்து வந்திருக்கின்றதென்பதையாவது புரிந்துகொண்டிருக்கிறீர்களா ? பகுத்தறிவுக்குச் சிந்தனைச் சக்தியிருக்கிறது என்பது உண்மை தான். எனினும் அது இயற்கை உண்மைகளை உணர்ந்துகொள்ளாத வழி எதையும் பகுத்துணர லாயக்கற்றது என்பதையாவது உணர்ந்திருக்கின்றீர்களா ?

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த மனிதனிடத்தில் பகுத்தறிவு இருக்கவில்லையா ? அல்லது

அதற்குச் சிந்தனைத்திறன் இருக்கவில்லையா ? இரண்டும் இருந்தன. பின்னர் ஏன் அவர்கள் இன்றைய மனிதர்களைப் போல் வாழவில்லை ? இன்று இயற்கையைத் தன் காற்கீழ் குற்றேவல் புரியும்படிச் செய்திருக்கின்றான் மனிதன். அன்றைய மனிதனோ அவ் இயற்கைக்கு அடிமையாய்க் கிடந்தான். பகுத்தறிவுப் பாசறை வீரர்களே ! அடிமையாய்க் கிடந்தவனை அரியாசனத்தில் ஏற்றியது எது ? பகுத்தறிவு தானா ? இருக்கலாம், ஆனால் அந்தப் பகுத்தறிவை இந்த மட்டத்திற்குஉயர்த்தியது எது? அதுதான், அன்று முதல் இன்று வரை மனிதசாதி இயற்கையை எதிர்த்துச் செய்கின்ற போராட்டம். அந்தப் போராட்டம் மேலும் மேலும் விஞ்ஞான உண்மைகளைப் பகுத்தறிவுக்கு உணர்த்துகிறது. கற்றுத் தேர்வதன் மூலம் பகுத்தறிவு மேல் மட்டத்திற்கு முறையாக வளர்ந்துகொண்டே போகிறது.

இந்த முறையில் பாருங்கள். இரண்டாயிரம் ஆண்டுகளில் எவ்வளவு விஞ்ஞான உண்மைகள் கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றன. அவற்றின் மூலம் மனித சாதி எவ்வளவு மகத்தான முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது. இந்த முன்னேற்றத்தின் சிகரத்தில் நின்று கொண்டு இந்த முனையோடு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முந்திய முனையை முடிச்சுப் போட முனைகின்ற மூதறிஞர்களே ! இது கேலிக் கூத்தல்லவா ? திருவள்

ளுவர் மிகமிகச் சிறந்த, தேர்ந்த, மேலான புலவர். ஆதலினால் அவர் இயற்றிய திருக்குறளில் காலத்தால் வேறுபடுவனவாகிய சமூகக் கருத்துகள் போனால் நிரந்தர இயல்புகளைப் பற்றிய கணிப்பு இன்றைக்கும் பொருத்தமாகவிருப்பதை நாம் காண முடிகிறது. அதற்காக அந்த ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களும் இன்று பொருந்தும்; பொருந்தும் என்று போடுகின்ற கூச்சல் தமிழனை ஏமாற்றும் கூச்சல்தானே.

எனவே, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய புலவருக்கு இன்றைய முற்போக்கு எண்ணமுண்டு என்னும் கருத்தைப் புகுத்தப் பாடுபடுகின்ற புலவர்களே! நீங்கள் கற்பனை வீரர்கள்; உங்கட்கும் இயற்கை உண்மையின் வழி இயங்கும் இந்த உலகிற்குப் எள்ளத்தனை சம்பந்தமுமிருக்க முடியாது என்பதைத் திட்ட வட்டமாகக் கூறுகிறோம்.

இதை இங்குக் கூறுவதன் அவசியமென்ன வென்றால் இப்படிப்பட்ட புதுவகைக் கண்டுபிடிப்புகளை அரிதில் கண்டு பிடித்து உலகிற்களித்துள்ள இவ்வருந் தமிழ்ப் புலவர்கட்குக் கம்பனைப் பற்றி மட்டும் ஏன் அவ்வகைப்பட்ட கண்ணோட்டம் மேற்படவில்லை? திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தைப் பாடியிருக்கமாட்டார் என்று மட்டும் தோன்றுகிறதே. கம்பன் இந்தப்

பாடல்களைப் பாடியிருக்க மாட்டான் என்று மட்டும் ஏன் தோன்றவில்லை ? என்று தான் கேட்கின்றோம். ஏன் தோன்றவில்லை ? இனப்பகை வெறியூட்டலுக்குக் "கம்பன் இப்பாடல்களைப் பாடியிருக்கின்றான் ; இதற்கு இதுதான் பொருள்" என்பது தான் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துகிறது. அது தான் காரணம். வேறொன்றுமில்லை என்பதை எடுத்துக்காட்டவே.

இனி நாம் தொடருவோம். கம்பனிடத்தில் காமரசத்தைக் கண்டு பிடித்த அதே புலவர்கள் **அதிவீர ராம பாண்டியன்** என்னும் நைடத மியற்றிய அருந் தமிழ்ப் புலவனை உச்சி மேல் வைத்து மெச்சுகின்றனர். பாவம்! கம்பனுடைய காவியத்தை முழுக்க முழுக்க படித்து அதில் உள்ள கருத்துக்களை யெல்லாம் அப்படியே உருக்குலையாமல் எடுத்துத் தம்முடைய அரிய படைப்பில் நிரப்பியிருக்கின்றவர் அவர் என்பதை அவர்கள் அறியார்கள்.

சீதையைத் தேடச் சென்ற அநுமனிடத்தில் இராமன் சீதையின் முலைகளைப் பற்றியும், அல்குலைப் பற்றியும் கூறியதாகக் கம்பன் தன்னுடைய காவியத்தில் புனைந்துரைக்கின்றானும். இந்தப் புலவர்கள் அதற்குக் கண், காது, மூக்கு எல்லாவற்றையும் ஒட்ட வைத்துத் தங்கள் அடுக்கு மொழி அலங்காரச் சொற்களில் ஒரு

போலிச் சித்திரத்தைத் தமிழர்க்கு வரைந்து காட்டுகின்றனர். உலகமே முழுகி விட்டதாயும் உரைத்துக் களிக்கின்றனர். கம்பனைத் தள்ளுங்கள். காமரசப் புலவர்களே! உங்கள் ஆஸ்தான புலவர் அதிவீர ராம பாண்டியர், அன்னங்கள் நளனுக்குத் தமயந்தியின் முலைகளையும், அல்குலையும், அவற்றின் அகல நீளங்களையும், அழகின் தரங்களையும் அடுக்கடுக்காகக் கூறுவதாக அவருடைய படைப்பில்—நைடதத்தில் கூறுகின்றாரே! ஒரு வேளை இதைக் காதல் ரசமென்று கருதுகிறீர்களோ? பாருங்கள்! பார்த்துக் கம்பனுடைய அந்தப் பாட்டிற்கும், உங்கள் அரும் பெறற் புலவர் அதிவீர ராம பாண்டியர் பாடியுள்ள அருந்தமிழ்ப் பாட்டிற்கும் வேறுபாடு என்னவென்பதை உலகறியக் கூறுங்கள்.

வெங்கதிர்க் கடவுள் கொடிஞ்சியந் தேர்க்கு
வியப்புற வாழியொன் றமைத்த
பங்கமி ரெழிலின் பயிற்சியா லநங்கன்
பைங்கிளிக் கூந்தன்மான் றேர்க்குச்
செங்கரம் வருந்த மலரயன் வகுத்த
திகிரியோ செய்யபொற் றட்டோ
வங்கர வல்கு லதனள வுரைக்கி
னுடவ ரவாவின தளவே.

—அனனத்தைத் துது விட்ட படலம் ,, 22-வது பாட்டு

"வாராழிக் கலசக் கொங்கை
வஞ்சிபோல் மருங்குலாடன்
தாராழிக் கலைசாரல்குற் றடங்கடற்
குவமை தக்கோய்
பாராழி பிடரிற் றங்கும்
பாந்தளும் பனிவென் றேங்கும்
ஒராழித் தேருங் கண்ட உனக்குநா
னுரைப்ப தென்னோ?

இது கம்பராமாயணப் பாட்டு. இரண்டுக்கும் என்னவாம் வேறுபாடு? காமரசப் புலவர்களே! இன்னுஞ் சொன்னால் கம்பனுடைய பாடலுக்கு விரிவுரை நிகழ்த்துகின்றார் உங்கள் அருந்தமிழ்ப் புலவர் என்று சொல்ல வேண்டும். அப்படியானால் உங்கள் ஆஸ்தான புலவரும் அப்படித்தானே, அந்த வழியில் தானே போகிறார். இதற்கு உங்கள் பதிலென்ன?

அவரு மிருக்கட்டும். அருணகிரிநாதர். அவருக்கு இப்படிப்பட்ட எதையும் கூற வேண்டிய அவசியமே கிடையாது. அவர் முருகனைப் பாடியவர். அந்தத் தோத்திரப் பாடல்களில் அவர் ஐயகோ! ஒன்றிரண் டிடங்களிலா இவற்றை வருணிக்கிறார்? வருணிக்கிறதோடாவது விட்டு விடுகிறாரா? இல்லையே, அவற்றின் சகல விவரங்களையுமல்லவா விவரிக்கிறார், அவரும் காமரசப்புலவர்களே! உங்கள் கணக்கில் காமப்பித்தர் தானா? உங்கள் பேரேட்டில் அப்படித்தான் எழுதிவைத்

திருக்கிறீர்களா? சரி; அவரையும் விட்டு விடுவோம்.

மாணிக்கவாசகர்! 'வான் கலந்த மாணிக்கவாசக! நின் வாசகத்தை, நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே, தேன்கலந்து பால் கலந்து செழுங் கனித் தீஞ்சுவை கலந்து, ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாம லினிப்பதுவே'' என்று இராமலிங்கர் போற்றுகின்றாரே அந்த மாணிக்கவாசகர். அவருக்கும் நமக்கும் மலையளவு கருத்து வேற்றுமைகளிருக்கலாம், ஆனால் அவரருளிய செழுந்தமிழ்ப் பாடல்கள் தமிழன்னைக்குச் சிறந்த பொன்னாபரணமாகத் திகழ்வது. அதை யாரும் மறுத்துவிட முடியாது. **சிவப்பிரகாச சுவாமிகள்** நால்வர் நான்மணி மாலையில்

'பூவெனப் படுவது பொறிவாழ் பூவே;
பாவெனப் படுவதுன் பாட்டு,'

என்று அவரருளிய பாடலைப் போற்றிக் கூறுவது முற்றும் பொருந்தும். கருத்தில் கவனத்தைச் செலுத்தாமல் செந்தமிழ்ச் சுவையை மட்டும் சுவைத்துப் பார்த்தால் அதனிலு மினிய தீஞ்சுவைப் பாக்களை வேறெதனிலும் காண்டலரிது என்னும் முடிவுக்குத்தான் நாம் வரமுடியும்,

அவர் சைவ சமயாசிரியர்கள் நால்வருள் ஒருவராகத் திகழ்கிறார். ஆகவே, அவர் ஒரு சாதாரணப் புலவரல்ல; சமயாசிரியர்! அவர் பாடிய திருவாசகமும், திருக்கோவையாரும் தோத்திர நூல்கள். இறை

வனைப் பற்றியே அந்நூல்கள் பேசுகின்றன. அத்த கைய நூல்களில் ஒன்ருகிய திருவாசகத்தில் பெண் களின் முலைகளைப் பற்றிய வருணனை காணப்படு கிறது. அதைப் படிக்கிறபோதே நம்மையுமறியா மல் நம்முள்ளே இனிமை தோன்றுகின்றது. அதைப் பாருங்கள்,

"கச்சற நிமர்ந்து கதிர்த்து முன்பணைத்து
எய்த்திடை வருந்த எழுந்து புடை பரந்து
ஈர்க்கிடை போகா இள முலை மாதர்தங்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்"

எப்படி! இன்னெரு புலவன் இதைவிட அவற் றைச் சிறப்பாக வருணிக்க முடியாது. காமரசப் புலவர்களைக் கேட்கின்ருேம். மணிவாசகர் காமப் பித்தர்தாமா? காம வெறியை மக்களுக்கு ஊட்ட வேண்டுமென்று தான் இந்த வருணனையில் கருத் தைச் செலுத்தியிருக்கிருரா? கூறுங்கள். போலீஸ் காரனைப் போல ஆகாதவனைக் குற்றவாளிக் கூண் டில் ஏற்ருதீர்கள். உயர்தர நீதிமன்றத்தில் அமர்ந் துள்ள நீதிபதிகளைப்போல நியாயத் தீர்ப்பளியுங்கள்.

அடுத்தபடியாக அப்பெரியவர் **அல்குலை** வருணிக் கிருர். இராமன் தன்மனைவியாகிய சீதையின் அல் குலைத்தான் கூறினுன். மாணிக்கவாசகர் அப்படி யல்ல. அவரைக் குருந்த மரத்தடியில் ஆட்கொண் டாரே, அந்தச் சிவபெருமான்; அவர் அருகில் வீற் றிருந்தருளும் அருளம்மையாகிய அகிலாண்டநாயகி

யின்-பார்வதியின் அல்குலையே வருணிக்கிறார். காம ரசப் புலவர்களே! தாயின் அல்குலையா? அதுவும் தந்தையின் எதிரிலா வருணிப்பது? கூறுங்கள். புது விதமான இலக்கிய ஆராய்ச்சியை உலகிற் களித்த புதுமைச் சிற்பிகளே! பதில் கூறுங்கள்! அந்தப் பாட்டைப் படித்துப் பார்த்து விட்டு அப்புறமாவது கூறுங்கள்.

" சங்கரா போற்றி மற்றோர்
சரணிலேன் போற்றி கேளப்
பொங்கரா வல்குல் செவ்வாய்
வெண்ணகைக் கரிய வாட்கண்
மங்கையோர் பங்க போற்றி "

'போங்கரா வல்குல் - மங்கையோர் பங்க போற்றி' என்று சொல்லித்தான் ஆகவேண்டுமோ? பின்னர் ஏன் இங்கே அதுவும் மணிவாசகரைப் போன்ற சமயாசிரியர் ஒருவரால் கூறப்படுகிறது? இங்கே மணிவாசகரைப்போலவே மற்றுமுள்ள சமயாசிரியர் களும் இப்படி இந்தப்பாணியில் பார்வதியின் அல் குலை வருணிக்கிறார்கள் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. ஆதலால் அன்றைய சமூகம் அது வும் சமூகத்தின் உச்சிமீது அமர்ந்துள்ள அறிவு டைய மக்கள் கூட்டம் இதை அங்கீகரித்திருக் கிறது. இப்படிக் கூறுவதில் எள்ளத்தனையும் அன் றைய சமூகம் அருவருப்படையவில்லை. இது ஒன் றும் அதிசயமில்லை. மனிதசாதியைக் கொஞ்சம்

பின்னே சென்று, அதாவது பத்தாயிரம் ஆண்டுக ளுக்குப் பின்னே சென்று பார்த்தால் இதைவிட எத்தனையோ அதிசயங்களைக் காணலாம். அண் ணன் தங்கையை மணந்து அன்புரிமையோடு மக் களைப்பெற்று மாண்புடன் வாழ்ந்திருந்தான். இதைப் படிக்கிற போதே உங்களுக்கு மூச்சு நின்றுவிடும் போல் தோன்றுகிறதல்லவா? பலர் ஒன்று சேர்ந்து ஒரு பெண்ணை மணந்து கொண்டு பண்போடு வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் வாழ்ந்த சமூகம் அவற்றை அநுமதித்தது. இதையெல்லாம் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் பன்னிரண்டாவது நூற்றுண்டில் வாழ்ந்த கம்பனைப் பற்றி-அவனு டைய பண்புகளைப் பற்றி நாம் உண்மையில் புரிந்து கொள்ள முடியும். நமக்குக் கசப்பாகவிருக்கலாம். நாமிருப்பது 20-ம் நூற்றுண்டு 1955 வது வரு டம். இங்கே நின்று விகடக் கச்சேரி நடத்து வதும் வெகு சுலபம்,

ஆனல் அந்தந்த கால கட்டங்களில் வாழ்ந்த மக் களுக்கு அவ்வளவு தான் தெரிந்து கொள்ள முடிந் தது. அவர்கள் பெற்றிருந்த விஞ்ஞான போதம் அந்த அளவுக்குத்தான் அவர்களுக்கு உணர்வளித் தது. அதைப் பார்த்தால்-விஞ்ஞானக் கண்கொண்டு பார்த்துத் தெளிந்தால் நாம் செய்கிற இந்தக் கச்சேரி விகடக் கச்சேரியாகவே முடியுமென்பதைக் கூறு வதற்கு ஆசைப்படுகிறேம்.

எனவே தமிழ்ப்புலவர்மரபில் இப்படி ஒருமுறை நீண்ட நெடுங்காலமாகவிருந்து வருகிறது. அம்மர பிற்றேன்றிய அருந்தமிழ்ப்புலவன் அவ்வழிச் செல்கின்றான். அவனைக் குறைத்துக் கூறப் புறப்பட்ட காமரசப் புலவர்கள் தங்கள் குலத்தையே குறைப் படுத்தி விட்டார்கள்! கம்பனைப் பற்றிக், காமரசத் தைப் பற்றி அவர்கள் அளந்த அளப்பெல்லாம் அவர்கள் முன்னேர்களாகிய அத்தனைப் புலவர்களை யும் குற்றவாளிக் கூண்டிலேற்றிக் கடைசியில் அவர்களையே குற்றபரம்பரையினராக ஆக்கிவிட் டன.

'அத்தனைப்பேரும் முட்டாள்கள்' என்று கூறினு லும் கூறுவர். இது அவர்களை எங்குக் கொண்டு போய்விடும் என்பதைப் பாருங்கள். சமூகத்தைப் பற்றியோ, அதன் உற்பத்தி வளர்ச்சி ஆகியவற்றைப் பற்றியோ, விஞ்ஞான முன்னேற்றத்தைப் பற்றியோ ஒரு விதக் கண்ணேட்டமுமில்லாதவர்களுக்குப் போடப்பட்டிருக்கும் கடைசி ஆசனங்களில்தான் அவர்களைக் கொண்டுபோய் அமரச் செய்யும்.

ஆகவே 'காமரசம்' என்பது கம்பனுடைய நூலில் மட்டும் இருப்பதல்ல; தமிழ் நூல்கள் எங் கும் பரவியிருப்பது. தமிழ் நாட்டில் அன்றைய சமூக எண்ணம் அதைத் தவருகக் கொள்ளவில்லை என்ப துவே முற்ற முடிந்த முடிபாகும் என்பதைக கடைப்பிடிக்க.

இறுதியாகக் கம்பனுடைய இராமாயண காவியந் தான் ஆரியர் ஆதிக்கத்தை நிலைநிறுத்திவிட்டதென் றும். ஆகவே அதைக் கொளுத்துவது ஆரியர் ஆதிக் கத்தைக் கொளுத்துவது என்றும் பொருள்பட விமர்சனக்காரர்கள் கூறுகின்றனர் உண்மை யென் றே வைத்துக் கொள்வோம். ஆரியர் ஆதிக்கத்தை இந் நாட்டில் நிலை நிறுத்தியது கம்பராமாயணம். ஆனல் அந்த ஆரியர், இந்தத்தமிழர், இன்னுமுள்ள அத்தனைப் பேர் மீதும் ஏறிக் கொண்டு இந் நாட்டை இருநூருண்டுகள் அட்டைபோல் ஒட்ட உறிஞ்சி வந்த - வருகின்ற அந்த வெள்ளை ஏகாதிபத்திய ஆதிக்கத்தை இந் நாட்டில் நிலைநிறுத்தியது எது? ஒருவேளை சிலப்பதிகாரமாக விருக்குமோ? அல்லது திருக்குறளாகவே இருக்குமோ? ஏனென்ருல் ஒரு நாட்டின் ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதெல்லாம் புத்தகங்களின் காரியம் என்று தானே அவர்கள் சாதிக்கின்றனர். அதனுல், இன்று ஆட்சி பீடத்திலிருந்தாவது அந்தச் சனியன் (ஏகாதிபத்தி யம்) விலகி நிற்கிறதே; அது எந்தப் புத்தகத் தைப் போட்டுக் கொளுத்தியதனுல்? அது தெரிய வேண்டுமல்லவா? புத்தகத்தை எரித்ததனு லல்ல; மக்கள் ஒன்று பட்டு உருக்கு போன்ற ஒற்றுமையைக் கட்டியதனுல் என்பதையும், மக்க ளுடைய ஒற்றுமை அவர்களை வேரோடும் வேரடி மண்ணேடும் பிடுங்கி எறிகிற அளவுக்குப்

பலம் பெற்றிருந்தது, எண்ணிய தென்றாலும் "இன்று ஏகாதிபத்தியம் அப்படித் தூக்கி எறியப்பட்டால், இந்தியாவிலேயே பொது மக்கள் தலைமீது உட்கார்ந்துகொண்டு இருக்கின்ற தங்களை ஆதிக்கக் கூட்டத்தை அந்த ஜனசக்தி தூக்கி வங்காளக் குடாக்கடலில் போடுவதற்கு அதிக நாள் பிடிக்காது" என்பதை முன்னரே அறிந்திருந்த இந்திய முதலாளி வருக்கம் அந் நிலை தங்களுக்கு ஏற்படாதவாறு அந்த ஏகாதிபத்தியத்தோடு ஒப்பந்தம் பண்ணிக் கொண்டு மக்களுக்குத் துரோகமிழைத்து விட்டது என்பதையும் நாம் மறுத்துவிட முடியாது.

அதனால் எந்த ஆதிக்கத்திற்கும், மாற்றத்திற்கும் புத்தகமோ அன்றி ஒரு புலவனோ காரணமாயிருக்கமுடியாது என்னும் உண்மை மறுக்கமுடியாததாகும்.

எனவே, இதுகாறும் எடுத்து விளக்கியவாற்றால் விமர்சனக்காரர்கள் கம்பனைப் பற்றியும், அவனுடைய உயர்தமிழ் இலக்கியப் படைப்பினைப் பற்றியும் எழுப்பிய தடைகளும் தகர்ந்து விட்டன.

இனி, விமர்சனக்காரர்களின் முயற்சியின் விளைவு என்ன? மக்களின் அறிவுத் திறத்தை மேம்படுத்தி அவர்களின் ஐக்கிய அணியைப்பலப்படுத்தி, நாட்டின் பொதுத் தேவையாகிய சுதந்திர சுயேச்சையை நிறைவேற்றுதற்கான சூழ் நிலையை ஏற்படுத்தியிருக்கிறதா? இல்லை. அதற்கு முற்றிலும் நேர்மாறான

நிலையையே அளித்திருக்கிறது. கம்பனைப் பற்றிய—அவனுடைய பேரிலக்கியத்தைப் பற்றிய விமர்சனம் அப்புலவனுடைய படைப்பினைக் கற்றுவல்ல கலைவாணர்களிடையில் ஒரு சிறு மாறுதலையும் தோற்றுவிக்கவில்லை. அதனையறிந்து கொள்ள வாய்ப்பற்ற இளைஞர்களிடையிலும் இம் முயற்சி முன்னிலும் சிறந்ததாகிய ஒரு நிலைமையை உருவாக்கி விடவுமில்லை. அவர்களே கூறுகிறமாதிரிக் கம்பராமாயணத்தைத் தீயிலிட்டுக் கொளுத்தும்படியான ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிற தென்பதை வாதத்திற்காக ஏற்றுக் கொண்டாலும், மறுபக்கத்தில் கம்பனும், அவனுடைய பேரிலக்கியமும் தமிழகத்தில் என்றும் பெருத பெருஞ் சிறப்பினைப் பெற்றுப் பொலிவதையும் நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும். **கம்பர் கழகங்களும், கம்பராமாயணச் சிறப்புச் சொற்பொழிவுகளும், ஆண்டுப் போலவைகளும்** நாட்டில் இதற்கு முன் என்றுங் கண்டுங் கேட்டுமிராத அளவுக்குத் தோன்றியிருக்கின்றகாட்சி, நாட்டின் சகலபகுதி மக்களையுந்தன்னகத்தே கொண்டு நிற்பதைக் காண முடிகிறதே யொழிய அதனைச் சுட்டெரிக்கும் முயற்சி அப்படி நாட்டின் பொது முயற்சியாகக் காண முடியவில்லை.

எனவே, கம்பனுடைய செந்தமிழ்ப் பேரிலக்கியம் தமிழகத்தில் முன்னிலும் பன்மடங்கு சிறப்புப் பெற்றுப் பொலிவதாகக் கணக்கிடமுடியுமேயல்

லாது தாழ்ந்து நசித்து விட்டதாகக் கணக்கிடமுடி யாது. எனவே விமர்சனக்காரர்கள் முயற்சி படு தோல்வியில் முடிந்திருப்பதை நாம் காணமுடியும்.

இதற்குமேல், எந்தத் தமிழர்கள் தங்கள் நாடும், மொழியும், நலமும் மேலோங்கப்பாடுபடவேண்டிய வர்களோ அவர்கள் இப்பிரச்சினையின் மூலம் மேலும் பிளவு பட்டுப் பிரிந்து நிற்கின்றனர். அத ஞல் இம் முயற்சி நாட்டின்-நாட்டு மக்களின் பொது முயற்சிக்கு, அதன் மூலமாக ஏற்பட விருக் கும் நன்மைக்கு ஊறு செய்திருக்கிறது என்பதும் நமக்குப் புலனுகாமற்போகாது. எனவே, விமர்சனக் காரர்களின் இம் முயற்சியை எந்தக் கோணத்தி லிருந்து பார்த்தாலும் நன்மை என்று கூறுதற்கில்லை.

அதனுல் தான் கூறுகிருேம். அவர்கள் முயற்சி நாட்டின்-நாட்டு மக்களின் நன்மையை மையமாகக் கொண்டதல்ல; நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொது வான வளர்ச்சியில் பழைமையில் வெறுப்பும், புது மையில் விருப்புமுடைய பல்லாயிரக்கணக்கான மக்கள் மேலும் முன்னேறிச் செல்லவேண்டிய பாதையிற் செல்ல வழி வகுக்காமல் அவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்திச் செய்வதறியாது திகைத்து நிற்கச் செய்யும் தீய முயற்சியையே மையமாகக் கொண்டு நிற்பது என்று.

விமர்சனக்காரர்கள் பழைமையில் வெறுப்புடைய மக்களுக்குப் புதுமைப் பாதையைச் செப்பனிட்டுத்

தரவில்லை. அதற்குப் பதிலாகப் பழைமை வெறுப் பைத் தங்களுக்குச் சாதகமாகக் கொண்டு, அதன் மீது இல்லாததும் பொல்லாததுமான இனவெறிக் கதைகளை இட்டுக்கட்டி அந்தப் பழைமை வட்டத் திற்குள்ளேயே மக்கள் சுற்றிச் சுழன்று கொண்டி ருக்கவே வழி செய்துள்ளனர். சீதையைப் பத்தினி என்று பேசிக் கொண்டிருப்பதுதான் பழைமை; அவளை விபசாரி என்றுபேசுவது பழைமையல்ல; புதுமை என்று அவர்கள் கூறுகின்றனர். பத்தினி பழைமை, விபசாரி புதுமை, அவ்வளவு தானே ஒழியச் சீதையும் அவளுடைய கதையும் பழையன வேயாகும். பின்னர்ப் பத்தினியை விபசாரியாக மாற்றி விட்டதனாலேயே அந்தப்பழைமை அற்புதப் புதுமையாவது எங்ஙனம்? எனவே இந்தக் கோ ணக் கூத்தில் எதுவாயினும் பழைமையேயாகும். புதுமையாகாது.

இன்று நாட்டின் நிலை என்ன? எதிர்ப்பு, ஆதர வுக் கட்சிகள் தோன்றியுள்ளன. இதன் உள்ளடக்க மென்ன? நாட்டு மக்கள் அவசியமற்ற ஒரு பிரச் சினையை மையமாகக்கொண்டு அதன் காரணமாகப் பிளவு பட்டு விட்டனர். நாட்டின் சகல தீமைக ளும், குறைகளும் தீர-நாடும், மொழியும், நலனும் அரியாசனம்பெற, வேண்டுவதாகிய முதல் தேவை என்ன? நாட்டு மக்களின் உருக்கு போன்ற ஒற் றுமை. அதற்கு விமர்சனக்காரர்களின் முயற்சி

திணையளவும் உதவி புரியவில்லை என்பது மட்டு மல்ல, மலையளவு கெடுதியும் புரிந்துவிட்டது. இது பிரத்தியட்ச உண்மை. இதைக் கணக்கி லெடுத்துக் கொள்ள மறுக்கின்றனர் விமர்சனக்காரர்கள். தங்களுடைய தப்புப் பிரசாரத்தைக் கேட்டு ஒரு கூட்டம் ஆரவாரஞ் செய்தலைக், கைதட்டுதலைப் பார்த்து மகிழ்கின்றனரேயொழியவிமர்சனக்காரர்கள் நாட்டின் ஒட்டுமொத்த நிலைமையை உன்னிப்பாகப் பார்க்க முயலுவதுங் கிடையாது. அவர்களுடைய அரசியலே அப்படிப்பட்ட அரசியல். தலைவர்களுடைய அரசியல்; மக்களுடைய அரசியலல்ல. தலைவர்கள், அறிவாளிகள், வீரர்கள், தீரர்கள் ஆகியோரே நாட்டின் தலையெழுத்தை நிர்ணயிக்கின்ற அவதார புருஷர்கள் என்பதுதான் அவர்களுடைய அரசியல். ஆகவே அவர்கள் மக்களுக்கு நாட்டின் முன்னேற்றத்தில், எந்த விதப் பங்கும், பாத்திரமும் இல்லை; எல்லாம் தங்களைப் போன்ற அறிஞர்களால் உருவாகின்றவை என்னுந் தலைகனத்தில் ஆழ்ந்து கிடக்கின்றனர். அதனுலேயே அவர்கள் நாட்டில் ஏற்படுகின்ற எவ்வகைப் பிளவுகளையும் பார்க்கவே மறுக்கின்றனர். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதுவே அவர்களுக்குப் பிடிக்காதது. அதனுல் தான் அவர்களே இரண்டு பட்டுக் கிடக்கின்றனர். கொள்கையில்—அடிப்படையில்—இலட்சியத்தில் ஒரே வகையினர்

என்று கூறிக்கொள்ளும் ஒரு கூட்டத்தினர் இரண்டாகப் பிரிந்து நிற்றலை உலகில் வேறெங்கும் நாம் கண்டு களிக்க முடியாது. அந்த உலக அதிசயம் நம்முடைய நாட்டில் தான் நடக்கிறது. அவர்கள் இருசாராருமே தாங்கள் தனித்து நின்றே தங்கள் இலட்சியத்தை எட்டிப் பிடிக்க முடியும் என்று மார்தட்டிப் பேசுகின்றனர். 'இதுவும் ஓர் உலக அதிசயமே. இந்த அதிசயத்தை அவர்கள் போராட்டங்களில் விடுக்கின்ற சவால்களிலிருந்து மிக எளிதில் நாம் புரிந்துகொள்ள முடியும்.

போராட்டத்திற் சேர ஒருசாரார் நிபந்தனை விதிக்கின்றனர். அதைக் கேட்டதும் மற்றொரு சாரார் அந்த நிபந்தனையி லிருக்கின்ற தாரதம்மியங்களைப் பற்றியோ, அந்த நிபந்தனையை ஏற்றுக் கொள்ளுவதற்கு இருக்கின்ற தடங்கல்களைப்பற்றியோ பேசி, எழுதி அதைத் தீர்த்துக்கொள்ள முயற்சிப்பதில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் எதற்காக உன்னைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்? என்னிடத்தில் ஆளில்லையா ? பணமில்லையா? அறிவில்லையா ? அல்லது நீ தான் போராட்டத்தில் வீரனா ? தீரனா ? என்றிப்படிப் பலவாறாகக் கூறிப் பிளவைப் பெரிதுபடுத்தி இதன் மூலம் உலக மக்களின் உன்னத சித்தாந்தமாகிய 'ஒற்றுமை சக்தி ஒன்றே எதையும் சாதிக்க வல்லது; பிளவு சக்தியல்ல ? பிரிந்து நிற்பதல்ல ?' என்னும் நற்போதத்தையே மறுத்துக் கேலிக் கூத்

தடிப்பது வெளிப்படையாகத்தெரிகிறது அல்லவா! இவர்கள் கவனத்தில் '**தலைவர்கள்**' தாம் என்றும், எப்பொழுதும் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள்; மக்களல்ல. மக்கள் மடையர்கள்! அவர்கள் கைப் பாவைகள்! தலைவர்கள் ஆட்டுகின்ற வழி ஆடுகின்ற பொம்மைகள்! அவ்வளவுதான். இன்றேல் எதிர்ப் பிரிவினரின் பின்னே தமிழகத்தின் மக்கள் கூடியிருப்பதையும் அவர்களும் இன்னுமுள்ள நாட்டின் இதர பகுதி மக்களும் ஒரு வழிச் சேர்ந்தாலல்லது பிரச்சினை வெற்றி பெற முடியாது என்கின்ற முற்ற முடிந்த போதமே அவர்களிடத்தில் மருந்தளவுக்குக்கூட இல்லாமல் போகுமா ? போகாது.

ஆகவே தான் கூறுகிறோம். இராமயணமோ, கம்பராமாயணமோ அல்லது கம்பனோ இன்னொரு புலவனோ மேலோங்குவதோ அல்லது கீழ் நோக்கிப் போவதோ அல்ல பிரச்சினை. பிரச்சினை தமிழக மக்கள் தங்கள் நாடும், மொழியும், நலனும் அரியாசனத்தில் அமர மேலும் மேலும் ஒன்று சேர, ஒற்றுமைப்பட வேண்டுவதே பிரச்சினை.

ஆதலால் அந்த நாட்டின் பொதுப் பிரச்சினைக்கு இந்த முயற்சி அணுவளவும் நன்மை செய்யவில்லை என்பது மட்டுமல்ல; மலையளவு தீமையைப்-படுபாதகமான தீமையைச் செய்து நாட்டின் பொது நன்மையைத் தூரத்தில் தள்ளிவிட்டது என்று. இனி, இராமாயண ஆதரவாளர்களும், எதிர்ப்

பாளர்களும் ஆஸ்திகர்கள் நாஸ்திகர்கள் என்று ஒருவரையொருவர் கூறிக் கொண்ட போதிலும் இருசாராரும் ஆஸ்திகர்களே. எல்லோரும் ஆஸ்தி கத்திற்குஅதாவது பழைமைக்குப்பாதுகாவலர்களே. வித்தியாசமென்ன ? ஒருசாரார்பழைமையைத் தேன் என்றும், பாலென்றும், தெவிட்டாத தெள்ளமுத மென்றும் துதிபாடித் தங்கள்பிழைப்பைப்,பேரைப் புகழை, ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளுகின்ற னர், இன்னொருசாரார் அது நஞ்சென்றும், விஷ மென்றும், நரக மென்றும் வியாக்கியானஞ் செய்து கொண்டு மேலும் மேலும் அத்த நஞ்சும், விஷமும், நரகமும் பல்கிப்பெருகிப்பல்லாண்டு வாழ மக்களைப் பிளவுபடுத்தி, அவர்கள் கவனத்தை ஆரவாரத்திற் செலுத்திக் கொண்டு பிழைப்பையும், பேரை யும், புகழையும், ஆதிக்கத்தையும் காப்பாற்றிக் கொண் டிருப்பவர்கள். அவ்வளவுதானே ஒழிய இருசாராரும் மக்களை ஒன்றுபடுத்தி அவர்களை இன்றுள்ள நச்சுப்பேய்ச் சமூகத்தினை மாற்றியமைக் கும் திருப்பணியில் ஈடுபடுத்துகிறவர்களல்ல ; உண் மையைச் சொன்னால் இவர்கள் இருசாராரும் மனித சாதி எவர் தடுத்தாலும், யார் நிறுத்தினாலும் அடைந்தேதீரவிருக்கின்ற **சோஷலிஸ நல்வாழ்வின் பரம வைரிகள்.** வியாக்யானகர்த்தர்கள் ; எதையும் அழகான பாஷையில், அலங்கார வார்த்தைகளில் கவர்ச்சிகரமாகப் பேசும் கண்ணியவான்கள்.

ஆதலால் இருவிதக் கூச்சலுக்கும் மக்கள் செவி சாய்க்காமல், இன்றுள்ள நிலையிலிருந்து நம் நாடும், மொழியும் நாமும் விடுதலை பெறுவதற்கான—சுரண்டலற்ற சோஷலிஸ நல்வாழ்வைப் பெறுவதற்கான நற்பாதையில் ஜாதிமதக் கட்சி, கருத்து வேற்றுமையன்றி ஒன்று சேர்ந்து நம் தலைமீது சமூகமே சுமத்தியுள்ள சரித்திரக் கடமையை ஆற்றுதற்கு முன்வர வேண்டும். எந்தப் பிரச்சினையையும் ' ஒற்றுமை ' யைக்கட்டுகிறதா ? பிளவைத் தூண்டுகிறதா ? என்பதையே மையமாகக் கொண்டு ஆராய வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் நாட்டில் பிளவுகளை அதிகரிக்கக்கூடாது. இருக்கின்றபிளவுகளை ஒன்றுபடுத்தவே முயற்சிக்கவேண்டும்.

வார்த்தை ஜாலங்களில், மயக்கப் பேச்சுகளில் மக்கள் மயங்கக்கூடாது. ஆரவாரங்களையும் ஆவேசங்களையும், அனற்பொறிபறக்கும்தீர்மானங்களையும் பார்த்து மக்கள் மயங்கிவிடக்கூடாது. **அவற்றின் விளைவு என்ன ? பலன் என்ன ?** என்பதைக் கொண்டே அவற்றின் தரத்தை நிர்ணயிக்கவேண்டும் என்று தமிழ் நாட்டு மக்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. ________
102613

Printed at the Nehru Press, Paper Mills Road, Madras - 11.